விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருக] யாழ்ப்பாணம்:— விஷு ௵ ஐப்பசி மீ ௨அ௨ (1941 நவம்பர் 13 வியாழக்கிழமை) [இலக்கம் ௫அ]

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

(முற்றொடர்)

விசேட நீர் வசதி:

யாழ்ப்பாணம் சைவாசிரியர்கள் கலாசாலையும் இரண்டு அநாதசாலைகளும் உபயோகித்தற்காக திருநெல்வேலியிலுள்ள நமது கிணற்றில் இரண்டு நீர்வாக்கிகள் இணைத்திருக்கின்றோம். இந்த வாக்கிகள் நமது சொந்த இலெக்ற் யந்திரத்தாலே இயக்கப்படுகின்றன. ஸ்நானத்துக்கும் சமையலுக்கும் வேண்டிய ஸ்தாபனங்களுக்கு நீர், குழாய்கள் மூலம் அனுப்பப்படுகின்றது. மேலதிக நீர் தோட்டவேலைக் குபயோகப்படுகிறது. விரைவில் அந்தப் பத்து ஏக்கர் நிலமும் செழிப்பான தோட்டமாகும். சிறந்த இலெக்ற் யந்திரம் அவசிய தேவைகளி லொன்று. நீர் சேகரித்தற்குப் பெரிய தொட்டியொன்றும் வேண்டும். பண்டிதர் அரைசிங்கத்துக்கும், திருநெல்வேலி K. S. சுப்பிரமணியத்துக்கும் இந்த நீர் அளிப்பு வேலையை நடத்துவதில் அவர்கள் செய்த உதவிக்காக நமது நன்றி உரியதாகும்.

பணம்:

ஆங்கில பாடசாலைகளும் அநாதசாலைகளும் தவிர்ந்த நமது உதவி பெறும் ஸ்தாபனங்களெல்லாம் நேர்ச்சம்பள முறையிலுள்ளன. ஆசிரியர்கள் நேரே சம்பளமாகப் பெற்ற தொகை தவிர, நாம் 18201 ரூபா 57 சதம் நன்கொடைப்பணம் இவ்வருடம் பெற்றோம். சுவலப்பிட்டியிலுள்ள நமது இரண்டு ஸ்தாபனங்கள் பெறும் பணம் இதிற் சேரவில்லை. இவ்வருடம் வேறு நன்கொடையும் கையளிப்புகளும் 15987 ரூபா 13 சதம். விடுதிமாணவர் பணம் 8547 ரூபா 85 சதம். ஆசிரியர்கள் சம்பளத்தில் நாம் செலவிட்டது 5692 ரூபா 57 சதம். தளபாடம் முதலியவற்றிற் செலவானது 11307 ரூபா 05 சதம். நிலம், கட்டடம் இவற்றிற் செலவானது 6948 ரூபா 02 சதம். விடுதிச் சாப்பாட்டிற் செலவானது 13794 ரூபா 11 சதம். இவ்வருடம் ஆசிரியர்கட்கு நேரே அரசாங்கம் கொடுத்த பணமும் சேர்த்து மொத்த நன்கொடைப்பணம் 3,50,000 ரூபா வரையிலாகும். சென்ற 17 வருடகாலமாகச் சங்கம் பொதுநன்கொடைகள் கையளிப்புக்கள் வகையிற் பணமாகப் பெற்ற தொகை 2,23,000 ரூபா. முதல் நான்கு வருடமும் வருடச் சராசரி 4000 ரூபாவாக இருந்தபொழுது நன்கொடைகள் கையளிப்புக்கள் சென்ற 13 வருடமாக வருடச் சராசரி 16,000 ரூபாவாக விருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இப்பொழுது சங்கத்துக்குச் சொந்தமாயிருக்கும் நிலங்களும் கட்டடங்களும் இலகுவாக 4,00,000 ரூபா மதிக்கப்படலாம்.

சென்ற 17 வருடத்திலும் சங்கம் பாடசாலைகளின் மேலதிகமாகச் செலவழித்த தொகை 1,34,000 ரூபா. அரசாங்க நன்கொடையும் ஸ்தான அதிகாரிகளும், ஸ்தான நிர்வாகசபைகளும் செலவிட்ட தொகையும் வேறு.

காணி வாங்குவதற்கும், பழைய-புதிய கட்டடங்கட்கும், கட்டடங்கள் கட்டுதற்கும், புதிய கிணறுகள் வெட்டிக் கட்டுதற்கும், பழைய கிணறுகளைப் புதுப்பித்தற்கும் சென்ற ஐந்து வருடத்திற் சங்கம் செலவிட்ட பணம் 25,000 ரூபா.

சங்கக் கடன் 25,000 ரூபாவுக்கு மேலிருந்தாலும் புதிய பாடசாலைகளைக் கட்டுவதிலும், பழைய கட்டடங்களை நீக்கிப் புதியவற்றை அமைத்தலிலும், பழைய பாடசாலைகளில் மேலதிகமான கட்டடங்களை அமைத்தலிலும், புதிய பாடசாலைகளுக்குக் காணி வாங்குவதிலும், பழைய பாடசாலைகளுக்கு இன்னும் நிலம் வாங்குவதிலும், கிணறு வெட்டுவதிலும், வித்தியாபகுதியார் விரும்பியபடி பழைய மலசல கூடங்களை மாற்றிப் புதிய முறைப்படி அவற்றை அமைத்தலிலும் சங்கம் தனது முயற்சியைத் தொடர்ச்சியாக விஸ்தரித்து வந்திருக்கிறதென்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். தளபாடம் அடுக்கணி என்னும் அவசிய தேவைகளிலே சங்கம் தேவையான பணத்தை லோபமின்றி விட்டிருக்கின்றது.

புதிய பாடசாலைகள்:

முற்கூறியபடி சங்கம் 8 புதிய தமிழ்ப் பாடசாலைகளை நடத்துகிறது. காரைநகர், கச்சாய், மருதங்கேணி, ஒட்டிசுட்டான், வேலணை தெற்கு, காரைநகர் (தம்பாட்டி), அராலி மேற்கு என்னுமிடங்களில் கட்டடங்கள் ஒரு பகுதி முடிந்திருக்கின்றன. சுருவில், மண்கும்பான், புன்னாலைக்கட்டுவன், புதுக்குடியிருப்பு என்னுமிடங்களில் காணிகள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. வடமாகாணத்திலே சைவப் பாடசாலைகள் இல்லாத கிராமங்கள் பலவுள. சனங்கள் தமது பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிற் சைவாசிரியர்களால் சைவச் சார்பிற் கற்பிக்கப்படவேண்டுமென்று மிகவும் ஆவலாயிருக்கின்றனர்.

கீழ்மாகாணத்திற் பாடசாலைப் பருவமுள்ள சைவப் பிள்ளைகள் பதினையாயிரம் பேர் இருந்தாலும் அங்கே பதினைந்து சைவப் பாடசாலைகள் மாத்திரம் உண்டு. இந்தப் பாரதூரமான குற்றம் இலங்கையிலுள்ள சைவர்களாற் சிறப்பாகவும் முயற்சியாலும் கொடையாலும் தீர்க்கப்படவேண்டியது. மத்தியமாகாணத்தில் சைவப்பிள்ளைகள் 30,000 பேருக்கு மேல். ஆயினும் சைவப்பாடசாலைகள் பத்துக்குள்ளே. மேல்மாகாணத்திற் சைவப் பிள்ளைகள் 7,500 பேர். ஆயினும் சைவர்களிற் பெரும் பணக்காரர் இருக்கும் அந்த மாகாணத்திற சைவப் பாடசாலைகளின் தொகை 3.

சங்கத்தின் பணவருவாய் மட்டாய் இருப்பதனுல் யாழ்ப்பாணத்திற் பல கிராம சனங்களும், இலங்கையில் ஏனையபாகச் சனங்களும் காலத்துக்குக் காலம் புதிய பாடசாலைகள் கட்டும்படி செய்யும் விண்ணப்பங்களை உடனே ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையிலிருக்கின்றது. சைவக் கல்வித் துறையிலே சைவர்கள் தம்மாலானவற்றைச் செய்து ஒத்துழைத்து தமது தமது கிராமங்களில மதமாற்றத்துக் குபயோகிக்கப்படும் நுட்பமான சூழ்ச்சி முறைகளைக் காலத்தோடு தடுக்கும்படி காப் பண்ணவேண்டும்.

பிரத்தியேகக் கல்விச் சபை:

பிரத்தியேகக் கல்விச் சபையாருக்கு யாழ்ப்பாணத்தில் எங்கள் சங்கப் பிரதிநிதிகள் சாட்சியம் கூறினர். நமது பிரதிநிதிகள் கூறிய தன் தாற்பரியமாவது:— இலங்கையில் அரசாங்க பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படுதற்கு நமது சங்கம் மறுப்பில்லை ஆனல் ஒவ்வொரு சமயத்தாரும் தமது சமயப் பாடசாலைகளிற் தமது பிள்ளைகளைப் படிப்பித்தற்கும், ஒவ்வொரு சமயப் பாடசாலையும் தனது சமயப் பிள்ளைகளுக்கு மாத்திரம் அரசாங்க நன்கொடை பெறுதற்கும் ஒருவகைத்தடையுமில்லாத சுதந்திரம் இருக்கவேண்டும் என்பதாம்.

முடிபு:

சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவக் கல்வியையும் சைவப் பழக்க வழக்கங்களையும் பிரகாசிப்பிக்கும் முயற்சி வெற்றியோடும் நற்பயனோடும் 17½ வருடம் கடந்தேறியிருக்கிறது. சிவபெருமான் திருவருளால் இப்போது 16,000 சைவப் பிள்ளைகளைச் சைவாசிரியர்களைக் கொண்டு கற்பிக்கும் 100 பாடசாலைகளுக்குமேல் அதற்குண்டு. இலங்கையிலே பாடசாலைப் பருவமுள்ள சைவப் பிள்ளைகள் 1,50,000 பேருளர். இவர்களில் 50,000 பேர் வரையில் ஏறக்குறைய 300 சைவப் பாடசாலைகளிற் கற்பிக்கப்படுகிறார்கள். இலங்கையிலுள்ள சைவர்கள் சைவப்பிள்ளைகள் யாவரும் சைவப் பாடசாலைகளில் சைவாசிரியர்களால் சைவச் சார்பிற் கற்பிக்கப்படும் வரையும் திருப்தியடையக்கூடாது. மலாய்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் இருக்கும் நம்மவர் காலத்துக்குக் காலம் பணமும் பிறவும் சங்கத்துக்கு குதவித் தம்மாலானதைச் செய்திருக்கிறார்கள். மத்தியநாட்டிலும், பர்மாவிலும் இருக்கும் நம் சமயத்தவரும் சங்கத்துக்குச் சிறிது உதவி செய்திருக்கிறார்கள்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கம், சைவர்கள் யாவரும் தமது கொடியைச் சுற்றிக் கூடித் தங்கள் புத்திமதியாலும் பணத்தாலும் சைவக் கல்வித்துறையில் தொடர்ந்து உதவுவார்களென்று காத்திருக்கின்றது.

இப்போதுள்ள சங்க அங்கத்தவர்கள் தொகை 1,000 வரை. இந்தத் தொகை கால் அடையில் 10,000 ஆகுமென்று சங்கம் காத்திருக்கின்றது. காலொரு வித்திற்று 3 சதத்திற்குக் குறைய (வருடம் 10

தொடர்ச்சி 4ம் பக்கம்)

## தமிழில் வசன நடை

[க. சச்சிதானந்தன்]

எட்டாவது வகுப்பிற்றான் வாசித்துக் கொண்டிருந்தேன். ஆனல் வியாசம் படிப்பிக்கும் பண்டிதருக்கும் எனக்கும் என்னவோ சென்மத்துப் பகையாய்ப் போய்விட்டது. எப்பொழுது பார்த்தாலும் என்னுடைய வியாசக் கொப்பியைச் சுவருக்கு மேலால் வீசிவிடுவார்.

ஒருநாள் எனக்கு ஒருயோசனை தோன்றிற்று. 'அடுத்த வீட்டிலிருக்கும் சிங்களவனைக் கேட்டுக் கொப்பி நிறைய எழுதிவிட்டால் நல்ல வியாசமாய்ப் போய்விடுமே' என்றதுதான் அந்த அபார யோசனை. 'தமிழறியாத சிங்களவனைக் கேட்டு எழுதினல் அது எப்படி ஒரு சிறந்த கட்டுரையாகும்!' என்று நீங்கள் கேட்கலாம். அது அப்படித்தான். 'வியாச மென்றால் யாருக்கும் புரியக் கூடாது; புரியாமல் கடுஞ்சொற்களை யெல்லாஞ் சேர்த்து நீட்டி முழக்கி எழுதுவதுதான் நல்ல கட்டுரை என்பது எங்கள் பண்டிதர் கட்சி. நான் எழுதுவதெல்லாம் 'வெட்ட வெளிச்சமாய்ப் புரிந்து விடுகிறது' என்று என்னைக் கோபித்துக் கொள்ளுவார். 'சிங்களத்தில் எழுதிவிட்டால் புரியாது; அதனல் என்னுடையதும் நல்ல வியாசமாகி விடாதா' என்றுதான் அப்படியோசனை பண்ணினேன்.

அந்த நாளில், தண்ணீர் என்று தப்பித் தவறி எழுதி விடக்கூடாது. அப்பு என்றுதான் பொறிக்கலாம்; அது அப்பனுயுமிருக்கலாம். "இவணின்று அவ்விடம் பெயர்வுழி உண்டாட்டுறையுளின் நளிகளி கொண்டு தழீஇ யிருந்த மகளிர் குழுவின்முற் குரலை நடுவட்டன் மதிபோன்று......" என்ற விதமாக ஏதோ கடபுட தடபுட என்று போக வேண்டும். இல்லாவிட்டால் அது கட்டுரையாகாது. 'புரிந்தால் யாராவது படித்து விடார்களா' என்று பயப்பட்டார்கள்! இப்படித் தமிழைக் கொலை செய்தார்கள் ஒருசில வெறும் ஏட்டுத் தமிழ்ப் பண்டிதர்கள். ஆனல் தாங்கள் தமிழ்த்தாயைக் கொலை செய்வதை அறியாதிருந்தார்கள்! இருந்தார்கள் என்றால் போனல் போகிறது; 'முன்னேதான் இருந்தார்கள்' என்று சும்மா இருந்து விட்டுப் போகலாம். ஆனல் இப்பொழுதும் அவர்கள் மறையவில்லை! அவர்களின் காக்கும், செவியும் எதுவோ கல்லாற் செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இனியதமிழை இத்தனை கரடுமுரடாக்கி யிருப்பார்களா?

ஒரு மொழியின் வளர்ச்சி பொது மக்களின் நாவிலேதான் தங்கியிருக்கிறது. பொதுமக்கள் வாசிக்காவிட்டால் பேசாவிட்டால்-அது, சமஸ்கிருதம் முதலிய ஊமைப் பாஷைகளைப்போல் ஆகிவிடும். அந்த நிலையைத் தமிழ்த்தாய் அடையாமல் இருக்கவேண்டுமானல், நாம் பொதுமக்களைக் கைவிடக் கூடாது. அவர்களுக்குப் புரியாமல் இப்படிக் கரடு முரடு பண்ணிக்கொண்டுபோனல், பண்டிதர்கள் தான் சிவசமந்திரம் சொல்வதுபோல் தங்களுக்குள் முணுமுணுக்க முடியும்; அதைப் பொதுஜனங்கள் ரசிக்க முடியாது. தமிழ்க்கடலின் ஆழத்திலே யிருக்கும் முத்துக்களை ஒருவேளை தமிழ்மக்கள் கண்டு விட்டாலோ என்று அடியிலே புதைத்தால் தமிழ் இப்படிப் போகாமல் வேறு என்ன செய்யமுடியும்.

பொதுஜனங்கள் மாத்திரமல்ல, பண்டிதர்களுமே இந்தக் கஷ்டத்தை அனுபவித்திருப்பார்கள். பண்டிதர்களெல்லாம் இன்னொருவரிடம் பாடங்கேட்கப் போவது எதற்காக! தொல்காப்பியருடைய சூத்திரமோ காக்கை பாடினியார் சூத்திரமோ விளங்காததற்கு அல்ல, அப்பப்பா அவர்களுடைய சூத்திரத்தான் ஒருவாறு புரிந்துவிடும்; ஆனல் அதற்கு உரையெழுதிய உரையாசிரியர்கள் வசனநடைதான் மண்டையை யுடைக்கிறது. காவியங்கள் தாமாகவே சுவைக்கின்றன. புலவன்சொல்வதும் புரிகிறது. ஆனல் அதற்கு அடியில் எழுதிய குறிப்பு மண்டையைப் பிளக்கிறது. இந்த மண்டைப் பிளப்பை, பண்டிதர்கள், வேறு பரம்பரையாய், மண்டையுடைப்புத் தீர்ந்தவர்களிடம் கேட்டுத் தொலைத்து விடுகிறார்கள். 'இந்த மண்டையிடியைப் பொதுமக்களும் அனுபவித்துத் தான் தீரவேண்டும்! தமிழ் வசனநடை சிங்களம் போலிருக்க வேண்டும்,' என்று பிடிவாதம் பிடிப்பது எல்லாருக்கும் தலையிடியுண்டாதற்கும், தமிழை ஒங்கானஞ் செய்தற்கும் மருந்து கொடுத்தது போலில்லையா!

ஆனல் இந்தக் குறையை யெல்லாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஓரளவுக்குத் தீர்த்து வைத்தார்கள். தமிழிலே நல்ல வசனநடை பொதுமக்கள் ரசிக்கும் நடை முதன் முதலில் எழுதியவர்கள் நாவலரவர்கள்தான். அவர் எழுதிய கண்டனங்கள் எல்லாம் சண்டமாருதம் போற் சென்று எதிரிகளைத் தாக்கிச் சிதற அடித்துவிடும். தமிழ் நடைக்கு உணர்ச்சியுண்டு, உயிருண்டு, என்று அப்பொழுது தான் தமிழர் உணர்ந்தனர்.

தமிழ்வசனநடை, எல்லாருக்கும் புரியும்படியாக, குறிபிட்டைத் தமிழிலே புகுத்தியதும் நாவலரவர்கள்தான். இது பழங்கதை.

ஆனல் இன்றைக்கு, முன்னிருந்த குறையை யெல்லாம் ஒரே பொருளன் மெல்ல விலக்கிக்கொண்டு வருகிறது. தமிழ்த்தாயின் மடியிலே யிருந்தவக் குழந்தை (அவர் பெரிய கிழவராலும் குழந்தைதான்) டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களே நீக்கி வருகிறார்கள். இப்பொழுது தமிழ் என்றால் சரி, சாமிநாதையர் என்றால் சரி, அப்படியான தமிழ்ப் பண்டிதன்—பழைய சங்க நூல்களை எழுத் தெழுத்தாய்க் கரைத்துக் குடித்த வித்வான், அவர்கள் கூட எழுதும் எளிய இனிய இனத் தமிழ் நடையைக் கண்டாகிலும் பண்டிதர்கள் திருந்துவார்களா!

### தனித் தமிழாம்!

சில காலத்துக்குமுன் என்னுடைய நண்பன் நாகலிங்கத்துக்கு ஒரு கடிதம் போடவேண்டியிருந்தது. நாகலிங்கம் என்ற பெயரைப் போட்டு அனுப்பினேன். ஆனல் கடிதம் திரும்பிவந்து விட்டது. அவருக்கு நாகலிங்கம் என்ற பெயர் இல்லையாம். 'பணிக்குறியனர்' என்று பின்னல் அறிந்தேன். நாகம்-பணி; லிங்கம்-குறி. இதைத்தான் பைத்தியம் என்று சொல்ல வேண்டும். நாகலிங்கம் என்றால் ஏதோ சமஸ்கிருதமாம். "சீச்சீ, அமிழ்திலுமினிய தமிழ் மொழியில் வேற்றுப்பாடைச் சொற்களைப் புகுத்தலாமா!" என்று தனிதனியாய்த் தவிக்கிறார்கள் இந்தத் தனித் தமிழ்க்காரர்கள் 'சோமசுந்தரம், சிச்சிச்சி சமஸ்கிருதம்; 'மதியழகனர்' என்று போடு; துவிசக்கரம் அல்லது பைசிக்கில் என்றால், ஐயோ ஐயோ வேற்றுப்பாடை; 'கால்விடுமிடிகை' இப்படியே இந்தப் பைத்தியம் வளர்ந்து கொண்டே போனல், தமிழ் நாட்டின் ஒவ்வொரு வீட்டிலுமே பைத்தியகாரக் ஆஸ்பத்திரி வைக்க வேண்டி நேரிடும்.

இவர்கள் சொல்லுவது 'தமிழோடு வேற்றுப்பாடையைக் கலக்காதே' என்பதுதான். இவர்கள் ஏடுகளுக்குள் கண்ணைப் புதைத்துக் கொண்டிருக்கிறார்

(தொடர்ச்சி 4 ம்பக்கம்)

## காந்திஜி அறிக்கையிற் கவனம்

### காங்கிரஸ் கக்ஷியினரின் விவாதம்

புதிய டில்லி நவ 4

இந்திய சட்டசபைக் காங்கிரஸ் கக்ஷியினரின் கூட்டம் இன்றும் நடந்தது. காந்திஜியின் அறிக்கை பற்றி மேலும் விவாதிக்கப்பட்டது. நாளைக்கும் கூட்டம் நடக்கும்.

## ஸேர். வாஜ்பேயர் மனம் மாறியதேன்

### நனம் ஆனேயிடம் நம்பிக்கை

### இலங்கை-இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதிகள் கோரிக்கை

புதிய டில்லி, நவ 7

வெளிநாட்டு இந்தியர் மத்திய சங்க ஆதரவில் இன்று மாலை ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்திய இலங்கை ஒப்பந்தம் இலங்கையிலுள்ள சுமார் 10லக்ஷம் இந்தியர்களின் நியாயமான உரிமைகளைப் பாதிப்பதாகவிருப்பதால், அந்த ஒப்பந்தத்தைக் கண்டிப்பதாகவும் இருநாட்டவருக்கும் இதனல் விரோதப் பான்மையே வருமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

#### ஸ்ரீ தேசாய் பிரசங்கம்

இக் கூட்டத்துக்கு மிஸ்டர் வி. மோஹன்தாஸ் தலைமை வகித்தார். ராஜா ஸேர். அண்ணாமலைச் செட்டியாரும் இக்கூட்டத்துக்கு வந்திருந்தார். இலங்கை இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதியான ஸ்ரீமான் தேசாய் இக்கூட்டத்திற் பேசியதாவது:

டில்லியில்சென்றவருஷம் இந்திய இலங்கை உறவுபற்றிச் சம்பாஷணை நடந்தபோது ஸேர். வாஜ்பேயர் இந்தியரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மிக்க உறுதியுடன் நடந்துகொண்டார். அவரே இப்போது அவசர அவசரமாக இந்த ஒப்பந்தத்துக்கு இணங்கிய காரணம் தெரியவில்லை. அவரது மனம் மாறியதேனே? இந்த ஒப்பந்தம் இந்திய-பர்மா ஒப்பந்தத்தைவிடக் கேவலமாகவிருக்கிறது. சென்றவருஷம் இலங்கைக் கவர்னர் இந்தியருக்கு விரோதமானசட்டம் செய்யக்கூடாதென உறுதியாகச் சொல்லியிருந்தும், இந்தியக் கவர்ன்மெண்டார் அனுப்பிய அதுக்கோஷ்டியினர் இவ்விதம் இந்தியருக்கு விரோதமான சட்டத்துக்கு இடங்கொடுத்து ஓர் ஒப்பந்தத்துக்கு வழிதேடிய காரணமென்னவோ தெரியவில்லை. இந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள ஆக்ஷேபகரமான அம்சங்களுக்கு அளவில்லை.

#### ஸ்ரீ ஆனே கூறியதென்ன!

ஸ்ரீமான் ஆனே சென்றவருஷம் இவ்வித பொதுக்கூட்டம் ஒன்றிற் பேசுகையில் இலங்கை இந்தியரின் நன்மையை நாடும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவதாகக் குறிப்பிட்டார்.

இப்பொழுது அவரே வெளிநாட்டு இந்தியர் இலாகாத் தலைவராக அரசாங்கத்தில் பதவி வகித்து வருகிறார். அவர் முன்சொன்ன வார்த்தைகளை மறவாமல் இலங்கை இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பார் என்று நான் நம்புகிறேன்.

#### ஸ்ரீமான் மோத்தா

பிறகு மற்றொரு பிரதிநிதியான ஸ்ரீமான் மோத்தா பேசியதாவது: 1923ம் வருஷத்தில் இலங்கை அரசாங்கத்தார் தங்கள் நாட்டுக்கு இந்தியக் கூலிகளை அனுப்பி உதவும்படி இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர். சிங்களவர்க்குள்ள உரிமைகள் அனைத்தும் இந்தியருக்கென அக்காலத்தில் இந்திய அரசாங்கம் கூறிய உறுதிமொழியைக் கொண்டே இந்தியர்கள் அப்போது இலங்கையில் வந்து குடியேறினர்கள். தற்சமயம் இந்திய கவர்ன்மெண்டு மட்டும் அனுமதி அளிக்கையில் இலங்கை அரசாங்கத்தார் இந்தியருக்கு விரோதமாக இவ்வளவு கடுமையான வித்தியாசம் காட்டமாட்டார்கள் என்றார்.

தலைவர் பேசியபின் கூட்டம் கலைந்தது.

## பத்தி

(ஆங்கில இந்துசாதனப் பிரசுரத்தில் (30-10-41) ஒரு அறிஞரால் எழுதி வெளியிடப்பட்ட வியாசத்தின் மொழி பெயர்ப்பு.)

(முற்றொடர்)

இங்ஙனம் வேட்டுவகுலத்திற் பிறந்தவரும் கல்விஞானம் சிறிதேனுமில்லாதவரும், ஞானசாத்திரங்களைப் பற்றிக் கேட்டறியாதவருமாகிய கண்ணப்பரிடத்தில் இத்துணைத் தெய்வபக்தி பிறத்தற்குக் காரணமுண்டோ? அவர் பரிபக்குவமடைந்தவரா? என்ற சிலர் ஆசங்கை கிளத்தக்கூடும்; இத்தகைனுயிற்ச (வழ்வினை)முற்பிறப்பிற் செய்த தவம் என்பதே விடையாகும்? இப்படியானவற்றை விட்டகுறை தொட்டகுறையென்ற உலகத்திலே சொல்லுவார்கள்; இவ்விஷயமாக அருணந்தி சிவாசாரியர் தாம் இயற்றிய சிவஞான சித்தியாரப் பாயிரத்திற் பின்வருமாறு கூறுகின்றார்.

> "பண்டை நற்றவத்தாற் றேன்றிப் பரமனைப் பத்திபண்ணுந்
> தொண்டரைத் தானே ஆயகதியினில் தொகுப்பன், மார்க்கர்
> கண்ட அலோதி விடு காதலிப்ப வர்கட்கீசன்
> புண்ட ரீகத்தாள் சேரும் பரிசினைப் புகலலுற்றும்."

இக் கண்ணப்பநாயனர் முற்பிறப்பிலேயே அருந்தவஞ்செய்து பரிபக்குவ நிலையடைந்தவர்; இவர் முற்பிறப்பிற் பாண்டவருள் ஒருவனுகிய அர்ச்சுனனென்றும், வேட்டுவ வடிவங் கொண்டு தனக்கு வரம் அருளும்படி எழுந்தருளிய கைலாசபதியை வேடுவனென்றெண்ணி வில்லாலடித்தலாகிய அபுத்திபூர்வமான தவற்றைச் செய்தமையினுல் இப்படி வேட்டுவ குலத்திற் பிறக்க நேர்ந்ததென்றும் திருக்காளத்திப் புராணம் முதலியன கூறும். அதி தீவிர பரிபக்குவ மிருந்தமையினுலேயே இக் கண்ணப்பநாயனர் காளத்தியப்பருக்குத் தொண்டுசெய்து காளாதிற் கண்ணிடந்தப்பி முத்திபெற்றனர். இவ்வரலாற்றைச் சங்கப் புலவருள் தலைவராகிய நக்கீரரும்:

> "வாமான்றேர் வல்லவயப்போர் விசயனைப் போல்
> ஆர்தாம் உலகிற் றவமுடையார்—தாமார்க்கும்
> காண்டற் கரியராய்க் காளத்தி யாள்வாரைத்
> தீண்டத்தான் பெற்றமையாற் சேர்ந்து."

எனச் சுருக்கிக் கூறியுள்ளார்.

அர்ச்சுனன் வீரத்திற் சிறந்தவன்; சகோதரப்பற்றிற் சிறந்தவன், பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்யும் இயல்பு பூண்டவன்; சத்திய விரதன்; சகல சுகுணங்களும் பூண்டவன்; மாதரார் விரும்பும் பேரழகுடையவன்; இப்படிப்பட்ட அர்ச்சுனன் சிவபக்தியில் தனக்கு ஒப்பாருமிக்காரு மில்லாதவன்: இவன் பரமேசுவரனிடத்தில் வரம் பெறவேண்டி அருந்தவம் புரியலானன்; இவன செய்த தவத்தின் திண்மையைபிட்டு வில்லிபுத்தூரார் பின்வருமாறு எடுத்துப் பாராட்டுகின்றார்.

> "கருத்துற கல்லெனச் சருதிப் பிடியுங் கன்றுங்
> களிற்றினமு மடலுரிஞ்சக் கறைபா னேறிப்
> பொருத்த முழைப்புற்றெனப் புயங்க மூரப்
> பூங்கொடி கண்மயனென்று பாங்கே சுற்றப்
> பரித்து வெயினுள் மழைநான பனிநாளென்று
> பராரம நெடுங்காலம் பயின்றுன் மண்ணி
> லருந்தவ முன்புரிந்தோரி லிவனைப்போன் மற்
> றுர் புரிந்தார் சிவசிவ வென்றறிய லாறே."

விஜயன் இப்படித் தவம் புரிந்ததும், புரிந்தவிடத்தில் அவனுடைய தவத்திற்குப் பங்கம் விளைக்கும் வண்ணம் நாகக்கொடியோன் பன்றி வடிவங் கொண்ட மூகன் என்னும் அசுரனை அங்கே செலுத்த, கைலாசபதி அச் செயலைத் திருவுள்ளத்திற்கொண்டு வேட்டுவ வடிவங் கொண்டு அம்பெய்து அப்பன்றியைக் கொன்றதும், அச்சமயத்தில் அர்ச்சுனன் அப்பன்றியின்மேல் ஒரு அம்பைப் பிரயோகித்ததும், சிவவேடருக்கும் அர்ச்சுனனுக்குமிடையே மல்யுத்தம் நேர்ந்ததும், விஜயன் பசுபதியைப் பரம்பொருளென்றறியாது வேட்டுவனென மதித்துத் தன் வில்லாலடித்ததும், சிவவேடர் அவனை எடுத்து மேலேயெறிந்ததும் பின்னர் தம் திருக்கோலத்தைக்காட்டி விஜயனுக்குத் திருவருள் பாலித்ததுமாகிய வரலாறனைத்தும் பாரதத்திற் பரக்கக் கூறப்பட்டுள்ளன. அந்தச் சமயத்திற் கைலாசபதியை அர்ச்சுனன் தோத்திரஞ் செய்ததாகவுள்ள பக்கல எவருள்ளத்தையும் உருக்கு மியல்பின:

> "விழுந்தரு விணையினின் மெலித்து காயிது
> மழுந்திய பிறவியி லயருவேன் முனஞ்
> செழுஞ்சுடர் மணிப்பணித் திங்கள் மௌலியாய்
> எழுந் தருளிய விதென்ன மாயமோ"

> "ஆதியே பண்டமு மனைத்து மாயொளிர்
> சோதியே! சொன்மறைத் தொக்கன் மௌலியாய்!
> வாதியே மரகத வலவி யாளொரு
> பாதியே பவளமாம் பரம ரூபியே"

> "பையரா வணி மணிப்பவள மேனியாய்
> செய்யவாய் மரகதச் செலவி பாகனே
> ஐயனே சேவடி யடைந்தவர்க் கெலாம்
> மெய்யனே பெங்குமாய் விளங்குஞ் சோதியே"

> "முக்கணு நிலவெழு முகிழ்த்த மூரலுஞ்
> சக்கர வதனமுந் தயங்கு வேணியு
> மைக் கயன் மரகதவல்லி வாழ்வுறு
> செக்கர் மெய்வடிவமுஞ் சிறந்து வாழியே."

[சென்ற (10-11-41) பிரசுரத்தில் 3ம் பக்கத்தில் பத்தியென்ற வியாசத்தில் "சூற்கொண்ட முகில் தண்ணிடத்துப் பொருந்திய மின்னுடன் நக்கிமலையிற் படிந்த மழைநீரைச் "சேருதல்" என இருப்பதைச் சொரிதல் எனத் திருத்திக்கொள்க. ப—ர்.]

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஐப்பசி மீ உஅ வியாழக்கிழமை


## தம்மைப் புகழ்கின்றாரா?

மியூனிச்சில், இற்றைக்குச் சிலதினங்கட்கு முன் ஹேர் ஹிட்லர் தமது படைவீரருக்கும் மற்றையோருக்கும் பிரசாரஞ் செய்தபோது, ருஷிய யுத்தத்திலே தாம் பெற்றுவரும் வெற்றியைவிட்டுப் பெரிதும் புகழ்ந்து பேசுகின்றார். அவர் கூறுவது நிசந்தானோ என எண்ண மனம் இடந்தருகின்றிலது; ஹிட்லர் ருஷியயுத்தத்திலே அந்த ருஷியருக்கு நேர்ந்த சேதத்தைவிட்டுச் சொல்லும்போது, ருஷிய போர்வீரர்களுள் மாண்டும் காயப்பட்டும் 80,00,000 பேருக்கு மேற்பட்டோர் யுத்தஞ் செய்ய உதவாராய்ச் சேதமுற்றனரென்று சொல்லுகிறார்; 15,000 ஆகாயப்படைகள் பகைவருக்குரியன நாசமாயின என்கின்றார்; '22,000 'தாங்கிகள்' பகைவர்பக்கத்தில் மோசம் போயின எனத் தெரிவிக்கின்றார்; இவைகளைத் தவிர, ருஷியர் செய்த யுத்த உபகரணங்களும் அவற்றைச் செய்தற்காகிய முதற் காரணப் பொருள்களும் நூற்றிற்கு அறுபது எழுபதைந்து விகிதம் தங்களாற் சேதப்படுத்தப்பட்டனவென்று சொல்லுகிறார். ஹிட்லர் சொல்லுங் கணக்கு நிசமானதோ என்பதில் எவரும் சந்தேகப்படுகின்றனர். மேலும் ஜர்மனிய ருஷிய யுத்தத்திலே ஜர்மனியராகிய தங்களுக்கு நேர்ந்த உயிர்ச்சேதம் பொருட்சேதம் எவ்வளவென்பதை ஹிட்லர் தம் பேச்சில் எடுத்துக் காட்டினாரில்லர். ருஷிய சர்வாதிகாரியாகிய மிஸ்ரர் ஸ்ராலின் தங்கள் சைநியததில் மாண்டவர்கள் தொகை, ஊறடைந்தோர் தொகை, பகைவர் வாய்ச் சிறைப்பட்டோர் தொகை எல்லாஞ் சேர்ந்து 13,58,000 பேர் வரையிலிருக்குமென மதிப்பிட்டுள்ளார்; மிஸ்ரர் ஸ்ராலின் தந்த கணக்கைத் தான் மெய்யென நாங்கள் நம்பவேண்டியது.

இவைபோக, ஹிட்லர் பிருத்தானியருக்கு ஒரு வீரவார்த்தையைத் தெரிவித்திருக்கின்றார்; "ருஷியரின் கேள்விப்படி பிருத்தானியர், ஜர்மனியராகிய எங்களுக்கு மாறாகப் பிறிதொரு யுத்தமுனை கோலிச் சமர்புரிய வேண்டுமானால் நார்வே நாட்டிலாக, ஜர்மனிய எல்லைப்புறத்திலேயாக, ஒல்லாந்து பெல்ஜியம் முதலிய நாடுகளிலேயாக, பிரான்ஸிலேயாக வந்து எதிர்த்துப் பார்க்கட்டும்; பிருத்தானியர் எவ்வளவு வேகமாக யுத்தத்திற்குப் புறப்பட்டு வருவரோ, அதனைக் காட்டிலும் அதி வேகமாக அவர்களைப் பின்னிட்டு ஓடச் செய்வோம்" என்று வீரம் பேசுகிறார். இந்த வீரப்பேச்சு இப்பொழுது ருஷியாவில் தாம் முற்பட்டுச் செல்வதைவிட்டு எழுந்ததா? இல்லையேல் அவருடைய மௌட்டீகம் காரணமாக எழுந்ததா? பிந்திய காரணத்தினாலேதான் எழுந்ததென நாம் எண்ணக் கிடக்கின்றது. இப்படியான வீரப்பேச்சினால் ஹிட்லர் எங்கள் பிருத்தானியரை வெருட்டிவிடலாமென எண்ணுகின்றார்போலும்; இது நடக்கப்போவதில்லை.

ஹிட்லர் பேசிய சமாதானப் பேச்சைப்பற்றிச் சொல்லுமிடத்துப் பிருத்தானிய பிரதம மந்திரியாகிய மிஸ்ரர் சேர்ச்சில் என்ன தெரிவித்துள்ளார்? "ஹிட்லருடன் நாங்கள் சமாதானம் பேசப்போனால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுக்கெல்லாம் நாம் உடம்படவேண்டியே நேரிடும்; ஆனதால் ஹிட்லராக, அவருடைய பிரதிநிதிகள் வேறு எவராக, சமாதானம் பேச முயன்றால் நாங்கள் ஒருபோதும் சம்மதிக்கப்போவதில்லை"; மிஸ்ரர் சேர்ச்சில் இப்படிப் பேசுவதற்குக் காரணமென்ன? சென்ற ஆண்டில் இருந்த நிலையைக் காட்டிலும் பிருத்தானியர் ஆகாயப் படையிலும் கடற்படையிலும் ஏனைய அரண்களிலும் பொருளாதாரத்திலும் விருத்தியடைந்து வருகிறார்கள். அல்லாமலும் மிஸ்ரர் ரூஸ்வெல்ற்றினுடைய அரிய உதவியையும் எங்கள் பிருத்தானியர் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள்; ஆனதால் பிருத்தானிய மந்திரியின் பேச்சு, ஹிட்லர்பேச்சுப்போல் வீண் பேச்சென்று நாம் நினைக்க வொண்ணாது.

இவை இங்ஙனமாக, யப்பான் செய்யும் யுத்த முயற்சி விஷயமாக இப்பொழுது கிடைக்குந் தந்திச் சமாசாரங்கள் மனத்திற்கு ஆறுதலைத் தரத்தக்கன வன்று; 120000 தொகை கொண்ட யப்பானிய சைநியம் இந்து சீனத்திற் சென்று திரண்டு நிற்கின்றனவாம்; இப்பொழுதும் யப்பானிய சைநியம் அங்கே செல்கின்றதாம். இதனைவிட்டு இப்பொழுது தைலண்டென வழங்கும் சீய நாட்டிலுள்ள அதிகாரிகள் அஞ்சுகின்றனராம்; தொகுத்துச் சொல்லுகில் கீழ்நாட்டிலிருக்கும் நாங்கள் இந்தக் கொடிய யுத்தம் விரைவில் முடிந்துவிட்டாலோ என்று எவ்வளவிற்கு நினைக்கிறோமோ அந்த நினைவிற்கு நேர்மாறாக இந்த யுத்தம் நீடித்துப் பல அனர்த்தங்களை இன்னமும் விளைக்குமெனச் சஞ்சலப்பட வேண்டியிருக்கின்றதெனலாம்.

## வழக்கறிஞருக்கு 6 மாதச் சிறை

### போஸ்ற் காட்டில் ஆபாச வார்த்தைகள்

நுககொடையைச் சேர்ந்த வழக்கறிஞரான மிஸ்ரர். ஏ. டி. ஜி. பிரிட்டோ மீது ஆபாசமானதும் ஆத்திரமூட்டத் தக்கதுமான விஷயங்களடங்கிய மூன்று போஸ்ற் கார்டுகளைத் தபாலில் அனுப்பியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் கொழும்பு அடிஷனல் டிஸ்திரிக் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ஆறு மாதக் கடுங்காவற் றண்டனை விதித்தார்.

நீதிபதி எதிரிக்குத் தண்டனை விதிக்கும்போது தாம் மிகவும் சலுகை காட்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

அப்பீல செய்வதாயிருந்தால் எவ்வளவு பிணைப்பணம் செலுத்த வேண்டுமென்பதை நிர்ணயிக்கும்படி எதிரியின் வழக்கறிஞர் கேட்டார்.

நீதிபதி அப்பீல் செய்வதாயிருந்தால் எதிரியை ரூபாய் 1000 பிணைப் பணஞ் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

## ஆயிரம் கள்ள ஒருரூபா நோட்டுகள்

அலகபாத் நவ 5

நேற்று ஸி. ஐ. டி. பொலிசாருடன் தல பொலிசாரும் நகரில் 20 இடங்களைச் சோதனையிட்டுப் 11 பேர்களைக் கைது செய்தனர்; கள்ளத்தனமாக நாணயங்கள் தயாரித்து வரும் ஒரு கூட்டத்தினரைப் பிடிப்பதற்காகவே இச் சோதனை நடந்தது; பரிதி அளவுக்குத் தயாரிக்கப்பட்ட ஆயிரம் 1 ரூபா நோட்டுகளும் அவற்றைத் தயாரிப்பதற்கான சாதனங்களும் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## 17-வது வருடாந்தக் கூட்டம்

### சன்மார்க்கபோதினி வித்தியாசாலையில் நடைபெற்றது

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சன்மார்க்க போதினி துவிபாஷா பாடசாலைமண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 17-ம் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது.

வித்வான் திரு. க. இராமலிங்கம் அவர்கள் தேவாரம் ஓதக் கூட்டம் ஆரம்பமாயிற்று. சுகவீனங் காரணமாக சபைத்தலைவர் டக்றர் S. சுப்பிரமணியமவர்கள் கூட்டத்திற்குச் சமுகமளிக்க முடியாமலிருந்தமையால் அத்வக்காத் திரு. S. R. கனகநாயகம் தலைமை வகித்தார்.

காரியதரிசி அத்வக்காத் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் சபையின் ஆண்டறிக்கையைப் படித்தார். பல கஷ்டங்களுக்கிடையே சபை திருப்திகரமாக முன்னேற்றமடைந்திருக்கின்றது என்பதை அவ்வறிக்கை காட்டிற்று. "அந்தியும், 500 ஆசிரியர்களையும் 16,000 மாணவர்களையுங் கொண்ட 108 பாடசாலைகள் அதன்கீழ் உள்ளன. அரசினர் உதவி நன்கொடைபெறும் 3 பாடசாலைகள் சபைக்கு அளிக்கப்பெற்றிருக்கின்றன. ஏறக்குறைய 1000 அங்கத்தவர்கள் சபையில் இருக்கின்றனர். கையோப்பப்பணமாகவும் நன்கொடையாகவும் இதுவரையில் சபைக்குச் சேர்ந்தபணம் ஏறக்குறைய 16,000 ரூபா இருக்கும். பெண்கள் ஆண்கள் அநாதசாலைகளுக்குக் கட்டடம் நிறுவுதற்காகவும், பழைய பாடசாலைகளைப் பெருப்பிப்பதற்காகவும் புதிய பாடசாலைகளைக் கட்டுதற்காகவும் பழையவும் புதியவுமான பாடசாலைகளுக்காக நிலங்களை வாங்குவதற்காகவும் ஆசிரியகலாசாலைக்கும் இரு அநாதசாலைகளுக்கும் வேண்டிய நீர் வசதியை யளிப்பதற்கு வேண்டிய ஓயில் என்ஜின் நீர்க்குழாய் வசதிகளை அமைப்பதற்காகவும் குறிப்பிடத்தக்க தொகையைச் சபை செலவு செய்திருக்கின்றது. இன்னும் 8 தமிழ்ப்பாடசாலைகள் அரசினரால் பதிவுசெய்யப்படவில்லை" என்றும் அவ்வறிக்கையிலிருந்து வெளியாயின.

இந்த அறிக்கையை அங்கீகரிக்கும்படி அரசாங்க அத்வக்காத் திரு. S. V. குலசிங்கம் பிரேரித்தார். பிரேரிக்குங்கால் அவர் சபையின் நன்முயற்சிகளைப் பாராட்டிப் பின்வருமாறு பேசினார்:—

"சென்ற 17 வருஷங்களாகச் சைவ வித்தியா விருத்திச் சங்கம், ஏறக்குறைய 30, 40 வருஷங்களுக்கு முன்னர், இளம் இந்துக்களாகிய நாம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் போதித்த உயர்ந்த லக்ஷியங்களை அடிப்படையாகக்கொண்டு மனத்திலே போட்ட திட்டத்தை மிக விரைவாகச் செய்து முடிப்பதிற் சித்தியடைந்துவிட்டது. இச்சபை அடைந்த வெற்றி மிகப் பெரியது. இலங்கையிலுள்ள இந்துக் கல்வி ஸ்தாபனங்களில் மூன்றிலொரு பங்கு சபையின் முகாமையின் கீழ் இருக்கின்றது. இவையெல்லாம் சபையின் காரியதரிசியாகிய திரு. சு. இராசரத்தினமவர்கள் போன்றோரின் தியாகத்தாலும் பெருமுயற்சியினாலுமே கைகூடின.

கிறிஸ்தவ பாடசாலைகளிற் கற்றபின்னர் அதற்கு நன்றியறிதலில்லாதவர்களாக இருக்கின்றனர் என்று இந்துக்கள் மீது கிறிஸ்தவர்கள் சிலர் குறை கூறுகின்றனர். நன்றி மறத்தல் பெரிய பாவம். ஆயின், இந்துக்கள் ஒருபோதும் நன்றிகொன்றவர்களாகார்கள். தங்களுக்குத் தாங்கள் உதவி செய்துகொள்ளுவது நன்றிமறத்தலாகாது. 100க்கு மேற்பட்ட பாடசாலைகளை வைத்து நடத்தியும் வருஷா வருஷம் 3 லக்ஷம் ரூபாவுக்கு மேல் அரசினர் நன்கொடையாகப் பெற்றும் சென்ற 13 வருஷங்களுக்கிடையில் 16,000 ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தைச் சேர்த்தும் வரும் சபையின் முயற்சி மிகப் பெரியதேயாம். இவ்வளவு உன்னத நிலைக்கு 17 வருஷமாகிய சிறிய காலத்திற்கிடையில் வந்ததுதான் இன்னும் அதிகமாக அதன் சிறப்பைக் காட்டுகின்றது. இந்துக்களுக்குச் சபையில் எவ்வளவு நம்பிக்கை யிருக்கின்றது என்பதையும் இதுகாட்டுகின்றது."

வழக்கறிஞர் திரு. M. R. காராளசிங்கம் அதை ஆமோதித்தார்.

அத்வக்காத் திரு. C. அருளம்பலம் குறித்த பிரேரணையை ஆதரித்துப் பேசும்போது யாழ்ப்பாணம்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# உலகம் பலவிதக்கதை

(முற்றொடர்)

**வஞ்சனை!**

சகோதரிமார் இருவரும் தங்கள் மைத்துனன் தங்கள் தகப்பனுரை எங்ஙனமாயினும் தேடிக் கண்டு தம்மிடம் அழைத்து வருவாரென்ற மகிழ்ச்சியோடிருந்தனர்; டக்டர் சுந்தரராசனும் வழக்கம்போல் அங்கு வந்து வந்து போவானாயினன்; இங்ஙனமாக ஒருநாள் இரவு 7 மணி வரையில் ஒருவன் இவர்கள் இருக்கும் மடத்தை விசாரித்து அங்கே வந்து சேர்ந்தான்; அந்தச் சமயத்தில் சாமியம்மாளும் இராமனுமே மடத்தின் முற்புறத்தில் நின்றார்கள்; வந்தவன் சாமியம்மாளைப் பார்த்து "அம்மா! இந்த மடத்தில் யாராயினும் யாழ்ப்பாணத்தவர்கள் இருக்கிறார்களா" என்று ஆவசியகத்தோடு கேட்க, சாமியம்மாள் "ஓம் இருக்கிறார்கள், ஏன்" எனவும், வந்தவன் "இங்கே அந்த வரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்களாமே, அவர்களை நான்பார்க்கலாமா" எனவும், இராமன், "ஏன் அவர்களை நீ பார்க்க விரும்புகிறாய்" என்று கேட்டான். "வேறொன்றுக்குமல்ல, அவர்களிடம் நான் அவசரமான ஒரு செய்தி தெரிவிக்க வேண்டிப் பத்துமைல் தூரத்திலிருந்து ஓடோடி வருகிறேன்" என்று வந்தவன் தன் முகத்திலே கவலை தோன்றச் சொன்னான் "அவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள்; அவர்கள் எங்களுடைய பிள்ளைகள்தான்; விஷயத்தைச் சொன்னால் உடனே அவர்களுக்குத் தெரிவிப்போம்" என்றான் இராமன். வந்தவன் "அந்தப் பிள்ளைகளின் தகப்பனாராம், பெயர் கந்தசாமி முதலியாராம், ஆபத்தான வருத்தமாக இன்னவிடத்திலேயுள்ள வைத்தியசாலையில் (என்று குறித்த இடத்தையும் வைத்தியசாலையையும் சொல்லி) கிடக்கிறார், தம்முடைய பிள்ளைகளைத் தாம் கண்மூட முன் ஒருமுறை பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்படுகிறார், தம்முடைய மக்கள் இங்கே இருக்கிறார்களாம், அவர்களுக்கு உடனே போய்த் தெரிவிக்கும்படி டக்ரரைக் கேட்க டக்ரர்தான் என்னை இங்கே அனுப்பினார்" என்றான். இவற்றைக் கேட்டுக்கொண்டு நின்ற சாமியம்மாள் மனம் பதைபதைத்துப் பிள்ளைகட்குச் சொல்லும்படி மடத்தினுள்ளே போக முயல, இராமன் அவளைத் தடுத்து "ஆச்சி, அவசரப்படாதீர்கள், விஷயம் முழுவதையும் நன்றாய்க் கேட்டறிந்து கொண்டு பிள்ளைகளுக்குத் தெரிவிப்போம்" என்று சொன்னான்; சாமியம்மாள் போகாது ஆவலோடும் கவலையோடும் நின்றாள்.

இராமன்:- நீ எங்கே இருப்பது? நீ அந்தநோயாளியை நேரிற் பார்த்தாயா?

வந்தவன்:- நான் அந்த ஆஸ்பத்திரியிற் சேவகனாக இருப்பவன்; நான் நோயாளியை நேரிற் பார்க்கவில்லை; எங்கள் டக்ரர் சீக்கிரம் போய் இப்படிச் சொல்லச் சொன்னார்; நான் வந்து இங்கே சொன்னேன்.

இராமன்:- பிள்ளைகள் இங்கே இருக்கிறார்கள்என்று உனக்கு யார் சொன்னது? டக்ரரா? வேறுயாருமா?

வந்தவன்:- டக்ரர்தான்; வேறு யாருஞ் சொல்லவில்லை.

இராமன்:- (சிறிது யோசித்துவிட்டு, இப்பொழுது நீஎங்கே போகிறாய்; எங்களுடன் கூடிக்கொண்டு வருவாயா?

வந்தவன்:- ஆம், வருகிறேன்.

இராமன்:- சரி, "நாங்கள் புறப்பட ½ மணி நேரமாயினுஞ் செல்லும், அதற்கிடையில் இந்தா 2அனு இருக்கிறது; இதைக்கொண்டு போய்க் கோயில் வீதியிலுள்ள பிராமணக் கடையில் நீ ஏதும் வாங்கிப் பசியாறிவிட்டுக் காலதாமதஞ் செய்யாமல் இங்கேவா" என்று சொல்லி இரண்டு அனுவைக் கொடுக்க, அவன் நமஸ்காரத்துடன் வாங்கிக்கொண்டு ½ மணி நேரத்துக்குள் வருவதாகச் சொல்லிவிட்டுப் போயினன்.

வந்தவன் பிராமணக்கடைக்குப் போனபின், இராமன் சாமியம்மாளைப் பார்த்து "ஆச்சி, இந்தச் செய்தியை எங்கள் தங்கைச்சிமாருக்குச் சொல்ல வேண்டாம்; இதில் ஏதோ கிருத்திரமம் இருக்கிறது; இதில் ஏதும் உண்மை இருந்தால் அந்த வைத்தியசாலையிலுள்ள டக்ரர் ஒரு கடிதமாயினும் எழுதியனுப்பியிருப்பார்; வந்தவனுடைய கண்களிற் சந்தேகமான பார்வை காணக்கிடக்கிறது; அவன் செய்தியைச் சொல்லும்போது சரீரம் சிறிது பதறுவதை அவதானித்தேன்; அவனைப் பார்க்கும்போது இந்த ஊருக்கயலிலுள்ள மறவன் போற் காணப்படுகிறான்; அவனுடைய சொல்லை நம்பினால் மோசம் வருமென்பது நிசம்" என்று பரிவுடன் சொன்னான். "இராமு, அப்படியானால் அவன் தானும் உடன் அங்கே வருவதாகச் சொல்லிப் போகிறானே; பொய் யென்றால் அவன் எங்களுடன் கூடிக்கொண்டு அங்கே வருதற்கு உடன்படுவானு......" என்று சாமியம்மாள் கிலேசப்பட, "இல்லை, ஆச்சி, அவன் பிராமணக் கடையிலிருந்து இங்கே மீண்டுவருவானோ என்பது சந்தேகம்; அப்படித்தான் அவன் மீண்டு வந்தாலும் நான் அவனை நம்ப மாட்டேன்; நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; அவன் சொன்னது பொய்யோ மெய்யோ என்று அறியத்தான் வேணும், அதனை நான் எப்படியாயினும் அவனுடன்போய் அறிந்து வருகிறேன்; நீங்கள் பிள்ளைகளுக்குத் துணையாக இங்கே தானே இருங்கள்........" என்று இராமன் சொல்வதற்கிடையில், சாமியம்மாள், "இராமு! உன்னை எப்படித் தனியே போகவிட்டு நான் பிள்ளைகளுக்குச் சொல்லாமல் இரகசியமாக வைத்துக் கொண்டிருக்க முடியும்; உனக்கு இந்தக் கருமத்திலே சந்தேகமாக இருந்தால் நீயும் போகாமல் விடலாமே" என்றாள். "அப்படியல்ல ஆச்சி, போய் உண்மையை அறியாமற் சந்தேகத்தோடு எத்தனை நாளுக்கு இருக்க முடியும்? ஒருபோது அவன் சொல்வது உண்மையாக இருந்தாற் பிள்ளைகளுக்குத் துரோகஞ் செய்தவனாவேன்; நீங்கள் என்னைப் பற்றிப் பயப்பட வேண்டாம். ஏககாலத்திலே பத்துப் பேர் வந்து என்னை எதிர்த்தாலும் நான் அவர்களுக்கு மறுமொழிசொல்லுவேன்" என்றான்; "இராமு, நீ எப்படித் தேறுதல் சொன்னாலும் உன்னைத் தனியே போகவிட்டு நான் மனந் தேறியிருக்க மாட்டேன்; பிள்ளைகள் அறிந்தால் என்னை வைவார்கள், வெறுப்பார்கள், குறைசொல்வார்கள்; ஆனதால் நீ இந்த விஷயத்தை மடத்திற்குப் போய் எங்கள் டக்ரருக்கு இரகசியமாகத் தெரிவி, அவருடைய யோசனையின்படி செய்" என்று சாமியம்மாள் சொன்னாள்.

**நல்ல யோசனைதான்**

"ஆச்சி, நீங்கள் சொல்வது நல்ல யோசனைதான்; நான் இப்பொழுதே அங்கே போகிறேன்" என்று சொல்லி டக்ரர் இருக்கும் மடத்திற்குப் புறப்படவே, அந்த வந்தவன், பிராமணக் கடையிற் பசியாறிவிட்டு எதிரே வர, அவனையும் கூட்டிக் கொண்டு இராமன் மடத்திற்குப் போய் அவனைப் புறத்தே நிற்கவிட்டுத் தான் உள்ளே சென்று டக்ரரைக் கண்டான்; இராமனைக் கண்டவுடன் டக்ரர் சிறிது திகைத்து "இராமு! ஏதும் விசேஷமோ, சற்று முன்பாகத்தானே நான் உங்கள் மடத்திற்கு வந்து மீண்டேன்" என்று அவனுடன் வினவினர். "அப்படி விசேஷமொன்றுமில்லை, ஐயா, ஒரு விஷயத்தைவிட்டு உங்களுடன் யோசிக்கும்படி வந்தேன்" எனவும், டக்ரர் விஷயம் என்ன என்று கேட்க இராமன் முழுவரலாற்றையும் சொன்னான்; "வந்தவன் இப்பொழுது எங்கே" என்று டக்ரர்கேட்க, "இந்தமடத்தின் வாயிற் புறத்தே நிற்கிறான்" என்று இராமன் சொல்ல, டக்ரர் வெளியே வந்து, அவன் அறியாதபடி அவனைப் பார்த்து அவதானித்துக் கொண்டு உள்ளே மீண்டார். "இராமன், அவனை நான் அவதானித்தேன்; அவன் சந்தேகப்பட வேண்டிய ஆளாகத்தான் காணப்படுகிறான்; நீ தனியே அவனுடன் போவது புத்தியல்ல, நானும் என் காரிற் புறப்பட்டு உன்னுடன் வருகிறேன்; இரண்டு பேருமாக அவனையும் கூட்டிக் கொண்டு போவோம்; நீ முந்தியே போய்ப் புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்; நான் உங்கள் மடத்து வாசலுக்கு இன்னும் கால்மணி நேரத்துட் புறப்பட்டு வருகிறேன்" என்று டக்ரர் சொல்ல, இராமன் "அப்படியே செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறத்தே வந்து அங்கு நின்றவனையுங் கூட்டிக் கொண்டு தாங்கள் இருக்கும் மடத்தை நோக்கிப் போய்முன் மடத்தில் அவனை இருக்கச்செய்து தான் உள் மடத்திற்குப் போனான். மடத்தின் வாசலிற் சாமியம்மாள் இருக்கக், கண்டு டக்ரரும் தானும் செய்துள்ள யோசனையை அவளுக்கு மாத்திரஞ் சொல்லிவிட்டு மடத்துள் தானிருக்கும் அறையுட் புகுந்து தனக்குக் கை வந்த ஆயுதங்களை எடுத்து மறைத்துக் கொண்டு

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

# இக்கால நல்லதங்காளா?

## பிள்ளைகளோடு கிணற்றுள் விழுந்திறந்த தாய்

(நமது நிருபர்)

10-11-41

புத்தூர் மேற்கில் வசிக்கும் ஒரு தாயும் நாலு பிள்ளைகளும் பஞ்சத்தினால் தங்களைத் தாபரித்துக் கொள்ள முடியாது கிணற்றுள் விழுந்து தங்கள் உயிரை விட்டனர். புத்தூர் மேற்கில் வசிக்கும் முப்பது வயதுடைய சின்னத்துரை பெண் கருலம்மா பதின்மூன்று வருடங்கட்கு முன்னர் விவாகம் செய்தார். விவாகஞ் செய்த பின்னர், நாலு பிள்ளைகளைப் பெற்றார். அவர்களில் மூத்தது பெண்பிள்ளை. அதற்கு இப்போது 11 வயது. அதன் பெயர் சின்னம்மா. இரண்டாவது பிள்ளை ஒன்பது வயதுடைய ஆண்பிள்ளை இதன் பெயர் பொன்னம்பலம், மூன்றாவது சபாரத்தினம் ஆறு வயது. நான்காவது வள்ளியம்மை; நாலு வயது. தாயாராகிய கருலம்மா புருஷனோடு பகைத்துக்கொண்டு சென்ற நாலு வருடங்களாகத் தமது தாயாருடன் சீவித்து வந்தார். இச்சம்பவத்திற்கு சில நாட்களுக்குமுன்னர் கருலம்மா நோயினால் பீடிக்கப்பட்டார். தமையும் தமது பிள்ளைகளையும் தாபரிக்க முடியாது. சென்ற 9-11-41ந் திகதி தமது பிள்ளைகளையும் கிணற்றுக்குள் போட்டுத் தாமும் கிணற்றுள் விழுந்து இறந்தாள். இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிசார் இடத்திற்குச் சென்று விசாரணை செய்தனர். டாக்குத்தர் மிஸ்டர். J. M. சோமசுந்தரம் மரண விசாரணையை நடத்தியபோது இறந்தவர்கள் தண்ணீருள் அமிழ்ந்தியதினால் மூச்சுத் திணறலால் இறந்ததாக அபிப்பிராயந் தெரிவித்தார்.

## கள்ளுக் கொட்டிலுக்கு நெருப்பிட்ட வழக்கு

### நல்லூரில் நடந்த சம்பவம் பற்றி விசாரணை

11-11-41

நல்லூரில் வசிக்கும் (1) V. சுப்பிரமணியம் (2) S. சின்னத்தம்பி (3) K. முருகேசு (4) S. கந்தையா (5) M. சோமசுந்தரம் என்பவர்கள் சென்ற 1940-ம ஆண்டு ஒக்டோபர் மாதம் 25-ந் திகதி காலை 3 அல்லது 4 மணியளவில் நல்லூரில் ஆறுமுகம் என்பவரின் வளவுக்குள் இளையவன்-பழனித்துரையாற் கட்டப்பட்ட கள்ளுக் கொட்டிலுக்கு நெருப்பு வைத்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்னுண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வயிரவி-வேலு கூறியவற்றின் சாரமாவது:-

பழனித்துரையை எனக்குத் தெரியும். அவன் என்னுடைய மருமகன். அவனுக்குஆறுமுகத்தின் வளவுக்குள் ஒரு கள்ளுக்கொட்டில் இருக்கிறது. அவன் ஆறுமுகத்தின் வளவைக் குத்தகை எடுத்திருக்கிறான். 24-10-41 ந் திகதி இரவு நான் அந்தக் கள்ளுக் கொட்டிலிற் காவலுக்காகப் படுத்திருந்தேன். அன்று பழனித்துரை காயப்பட்டு ஆஸ்பத்திரியிற் சிகிச்சையின் பொருட்டு இருந்தான். அவனுக்கு நடராசா வென்பவரும் அப்பாத்துரையுமாகக் கத்தியாற் குத்திக் காயமுண்டாக்கியதாக ஒரு வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இச்சம்பவத்தன்று கந்தசுவாமிகோயில் மணியடிக்கு முன்னர் அதாவது 3 மணிக்கும் 4 மணிக்குமிடையில் எதிரிகள் ஐவரும் கள்ளுக் கொட்டில் இருந்த வளவுக்கு வந்தனர். அப்போது முருகேசு வந்து "என்டா இங்கே நித்திரை செய்கிறாய்" என்று கேட்டார். நான் நித்திரையால் எழும்பினேன். நான் எழுந்தபோது சுப்பிரமணியம் ஒரு தகரத்தையும் மற்றையோர் பொல்லுகளையும் வைத்திருக்கக் கண்டேன். முருகேசு என்னை வெளியேபோடா என்று சொன்னார். நான் ஒரு தென்னை மரத்தடியிற் சென்று நின்றேன். பின்னர் முருகேசு நாலு மூலைக் கூரையிலும் எண்ணெயை ஊற்றும்படி சுப்பிரமணியத்திடம் சொன்னார். அவர் அப்படியே செய்தார். இரண்டாம் எதிரி சின்னத்தம்பி முதல் ஒரு நெருப்புக்குச்சைத் தட்டினார். அது அணைந்து விட்டது. பின்னர் இரண்டாம் முறை ஒரு குச்சைத் தட்டிக் கூரையிற் பிடித்தார். உடனே நெருப்பு வேகமாகப் பற்றி எரிந்தது. 1-ம் 2-ம் 3-ம் எதிரிகள் என்னைப் பயமுறுத்தி வெளியே போகும்படி கூறினர். நான் வெளியே சென்றேன். அப்போது 4ம் எதிரி "வரர் ஒத்தபடி நடக்குது ஓடடா" வென்றார். 5-ம் எதிரி ஒன்றும் பேசவுமில்லைச் செய்யவுமில்லை. நான் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டேன். மூன்றும் எதிரியின் மகன் பழனித்துரை என்பவனின் கத்திக் குத்து வழக்கில் விளக்கமறியலில் அந்த நேரத்தில் இருந்தமையால் இதனை அவர்கள் செய்தார்கள். அல்லாமலும் அன்று இரவு சிவன் மரங்களிலுள்ள பாளைகளும் வெட்டப்பட்டன.

இதன் பின்னர், ஆழ்வார்-முத்து சாக்ஷியம் கூறியபின், நீதிபதி வழக்கை மேல் விசாரணைக்கு வருகிற 3-12-41ந் திகதிக்குத் தவணையிட்டார்.

## நகை இரவல் பற்றி நீதிபதி குறிப்பிட்டவை

நல்லூரில் வசிக்கும் ஸ்ரீமதி யோகம்மா மீதும் கோப்பாயில் வசிக்கும் நாகம்மாவும் கோப்பாயில் வசிக்கும் S. V. சின்னப்பாவின் 120 ரூபா பெறுமதியான காப்புகளைச் சுயவினியோகஞ் செய்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பேர்னுண்டோ முன்னிலையில் விசாரணைக் கெடுக்கப்பட்டு விசாரணையின் பின், நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளல்லவெனக் கண்டு விடுதலை செய்தார். விடுதலை செய்தபோது, நீதிபதி கூறியவற்றின் சாரமாவது:-

"இவ்வூரில் பாகுபாடின்றி நகைகளை இரவல் கொடுக்கும் வழக்கம் அதிகமாகவிருக்கிறது. அப்படி இரவல் கொடுக்கிறவர்கள் அதனால் ஏற்படும் கஷ்டத்தையும் ஏற்கச் சித்தமாயிருக்க வேண்டும். நகைகளைக் கொடுத்த பின் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து தண்டனைக்குள்ளாக்க நினைக்கிறார்கள். அப்படி இரவல் கொடுப்போர் சிவில் கோட்டில வழக்கை வைத்து நடத்த வேண்டும்" என்று கூறினார்.

## வேலைக்காரன் சங்கிலியைத் திருடினனும்

நல்லூரைச் சேர்ந்த இராசாவின் தோட்டத்தில வசிக்கும் பொன்னம்பலம் கைம்பெண் அழகவல்லி வீட்டில் நின்ற வேலைக்காரன் இராமலிங்கம்-தர்மலிங்கம் ரூபா 90 பெறுமதியான சங்கிலியொன்றைக் களவாடிச் சென்று வண்ணார்பண்ணையில் நகைக்கடை வைத்திருக்கும் V. S. நடராசாவின் கடையில் விற்கக் கொண்டு போனபோது நடராசா அவன்மீது ஐயுறவுகொண்டு பொலிசாருக்கு அறிவித்தார். பொலிஸ்சார்ஜன் அருளப்பு இடத்திற்குச் சென்று விசாரணை செய்து நகையின் சொந்தக்காரரைத் தேடிக் கண்ட பின்னர் எதிரிமீது இன்று களவெடுத்ததாக ஒருவழக்கைத் தொடர்ந்தார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரியை 200 ரூபாப்பிணையில் விட்டுத் தீர்ப்புக் கூறுவதை 18-11-41-ந் திகதிக்குத் தவணையிட்டார்.

## சால்வைத் திருடனுக்கு 3 மாசம்

கரையூரில் வசிக்கும் சில்வேஸ்ரி—ஞெபேட்ஸ் என்பவன் சென்ற 1941-ம் ஆண்டு செப்டெம்பர் மீ 23-ந்திகதி ஆனைப்பந்தியடியில் வசிக்கும் K. சுப்பிரமணியம் என்பவரின் சால்வையையும் துவாயையும் களவாடினதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பேர்னுண்டோ முன்னிலையிற் றொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு மூன்றுமாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## சுளிபுரத்தில் வீடு புகுந்து நகைத் திருட்டு

### பொலிசார் புலன் விசாரிக்கின்றனர்

12-11-41

சுளிபுரத்தில் வசிக்கும் பாலுப் பிள்ளை என்பவருடைய வீட்டில் யாரோ கள்வர் புகுந்து ரூபா 1837 50 சதம் பெறுமதியான நகைகளையும் வேறு சாமான்களையும் களவாடிச் சென்றுவிட்டதாகச் சங்கானைப் பொலிசாருக்கு ஒரு தகவல் கொடுக்கப்பட்டது. பொலிசார் விசாரணை செய்து வருகிறார்கள்.

## வீரகத்திப்பிள்ளை ஞாபக 'வார்ட்'

### மக்லியட் ஆஸ்பத்திரியில் திறந்து வைக்கப்பட்டது

இம்மாதம் முதலாந்திகதி சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் டிஸ்றிக் நீதிபதி C. குமாரசாமியவர்களின் பாரியாரால் இணுவில் மக்லியன் ஆஸ்பத்திரியில் வீரகத்திப்பிள்ளைஞாபகவார்ட் திறந்து வைக்கப் பட்டது. பெருந் திரளானோர் சமுகமளித்திருந்தனர்.

காலை 11 மணிக்கு ஸ்ரீமதி. C. குமாரசாமி யவர்கள் அங்குச் சமுகமளித்தார். திரு. வீரகத்திப்பிள்ளையின் பேர்த்தியாகிய ஸ்ரீமதி M. இராஜேந்திரம் அவருக்கு ஒரு பூச்செண்டை உதவினர். ஸ்ரீமதி V. இராஜசேகரம் செல்வி L. K. கிளார்க்குக்கு ஒரு பூச்செண்டை உதவினர். செல்வி இராசசேகரத்தால் ஸ்ரீமதி R. கெனடிக்குப் பூச்செண்டு வழங்கப்பெற்றது. மாகாணத்தலைவர் திரு M. பிரசாத்துக்கு டக்டர். V. துரைசுவாமியின் மகளால் மாலை சூட்டப்பெற்றது. டக்டர். R. கெனடிக்கு திரு. S. வீரகத்திப்பிள்ளையின் சகோதரரும் மலாய்நாட்டில் போஸ்ற்மாஸ்றராகக் கடமைபார்த்து இளைப்பாறிய வருமாகிய திரு. இராமசாமியால் மாலை சூட்டப்பட்டது.

குறித்த வார்ட்டைச் செல்வி கிளார்க் அங்கீகரிக்கும்போது, வீரகத்திப்பிள்ளையின் புதல்வர் அதை உதவியதற்காக அவர்களுக்கு நன்றி கூறி, பின்னரும் அவரைப் பின்பற்றி இத்தகைய நன்கொடைகளை அளிப்பார்கள் என்று நம்புவதாகவும், அதுபோன்ற அழகிய வார்ட்டைத் தான் இலங்கையில் வேறு எங்கும் பார்த்ததில்லை யென்றும் கூறினர்.

அதன்பின், டக்டர். கெனடி பேசியதாவது:-

"இந்த வார்ட்டை வீரகத்திப் பிள்ளையின் புதல்வர்கள் நன்கொடையாக அளித்திருக்கின்றார்கள். எவ்வித மரியாதையையும் விரும்பி அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. இப்போது யாழ்ப்பாணத்திலுள்ள பல குடும்பங்கள் இன்பகரமாக வாழ்வதற்குக் காரணராயிருந்த டக்டர். மிஸ். கேருக்கு நன்றிபாராட்டும் நோக்கமாகவே இதனை அளித்திருக்கிறார்கள்.

இதன்பின், திரு. V. இராஜசேகரம் குறித்த வார்ட்டின் திறப்பை ஸ்ரீமதி. குமாரசாமியிடம் கொடுக்க, அவர் ஆசீர்வாதத்தோடு அவ்வார்ட்டின் கதவுகளைத் திறந்து வைத்தார்.

காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளையின் படத்தைத் திறந்து வைக்கும்போது திரு. M. பிரசாத் பேசியவை வருமாறு:-

இந்தவார்ட்டை உதவியவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருபெரிய வர்த்தகர் என்பது நான் அங்கு பொலிஸ் கோட்டு நீதிபதியாக இருந்த காலத்து எனக்கு நன்கு தெரியும். இத்தகைய ஓர் அழகிய வார்ட்டைத் திறந்து வைக்கக் கிடைத்தது என் சிலாக்கியமே யாகும்."

இதன்பின் சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டதும், கூட்டம் இனிது நிறைவேறியது.

## ராஜியச் சிறையாளர் விடுதலை

### 12-ந் தேதி அறிக்கை வெளிவருமாம்

புதியடில்லி, நவ 7

இந்தியா சட்டசபைக் கூட்டத்தில் நவம்பர் 12ந் தேதி பாதுகாப்புச் சட்டப்படி காவலில் வைக்கப்பட்டிருக்கும் பந்தோபஸ்துக் கைதிகளை விடுதலை செய்யும்படி ஸ்ரீபான் ஜோஷி கொண்டுவந்த பிரேரணை விவாதத்துக்கு வரும்; அந்தச் சமயத்தில் ராஜியச் சிறையாளர் விடுதலை சம்பந்தமாகக் கனம் மாக்ஸ்வெல் முக்கியமானதொரு அறிக்கை வெளியிடுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

# அச்சு வல்லரசுகளோடு சுபாஷ் ஒப்பந்தம்?

## ஜெர்மனி இந்தியாமீது படையெடுத்தால் உதவிசெய்ய உறுதி கூறியிருக்கிறாராம்

### ராஜாங்கசபையில் அறிக்கை

புதுடில்லி, நவ, 10—

"ஸ்ரீசுபாஷ் சந்திரபோஸ் ரோமாபுரியில் இருக்கவேண்டும் அல்லது பேர்லினில் இருக்க வேண்டும் என்று சிறிது காலமாக இந்தியாவின் சில வட்டாரங்களிற் சாதாரணமாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. இந்தியாமீது ஜெர்மனி படை யெடுத்தால் உதவு கூறுவதன் மூலம் ஜெர்மன் படைகளுக்கு உதவியளிக்கச் சம்மதித்து அச்சுவல்லரசுகளுடன் அவர் ஓர் ஒப்பந்தஞ் செய்திருப்பதாகவும் பேசப்பட்டு வருகிறது. இது சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களும் வெளியாயிருக்கின்றன. ஸ்ரீசுபாஷ் சந்திரபோஸ் சத்துருவோடு போய்ச் சேர்ந்து விட்டாரென்று இவைகளிலிருந்து சந்தேகமற அறிந்து சொல்ல இடமிருக்கிறது."

ஸ்ரீசுபாஷ் சந்திரபோஸின் நடமாட்டஞ் சம்பந்தமாக இன்று ராஜாங்க சபையில் ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது உள்நாட்டு இலாகாக் காரியதரிசி மிஸ்றர். கன்ரன்ஸ்மித் என்பவர் மேற்குறிப்பிட்டவாறு மறுமொழி அளித்தார்.

### பேர்லின் மகாநாட்டில் சுபாஷ் சமுகம்

இந்தியாவில் வெளியிடப்பட்ட சில துண்டுப் பிரசுரங்கள் மூலமாக இந்திய அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்ததாக மிஸ்றர். கன்ரன்ஸ்மித் மேலும் சொன்னார். இந்தத் துண்டுப்பிரசுரங்களிலிருந்து அவர் இருவிஷயங்களை வாசித்துக் காண்பித்தார். அத்துண்டுப் பிரசுரங்களிற் கூறப்பட்டிருப்பதாவது:-

"இந்தியாவிற் புரட்சி நடத்துவதற்கான நாள் வந்துவிட்டது. பேர்லினில் நடந்த ஒரு மகாநாட்டில் ஓர் ஒப்பந்தஞ் செய்யப்பட்டது. புரட்சிக்காரர் சுபாஷ் சந்திரபோஸும் சமுகமாக இருந்தார்."

மிஸ்றர் கன்ரன் தொடர்ந்து கூறியதாவது:-

"ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் இப்பொழுது ஐரோப்பாவில் இருக்கிறார். இந்தியாவிலுள்ள புரட்சிகரமான கட்சியோடு அவர் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறார்.

தமது சொந்தக் கையெழுத்தோடேயே அவர் ஏற்கனவே ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவர் சில அயல்நாட்டு வல்லரசுகளோடு சேர்ந்து சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டிருக்கிறார். ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் எவ்விதம் பேர்லின் அல்லது ரோமாபுரி நகர் போய்ச் சேரமுடிந்தது என்பது பற்றி இதுவரை அரசாங்கத்துக்கு எதும் தகவல் கிடைக்கவில்லை."

## இந்தியாவை நெருங்கும் ஆபத்து

### எதற்கும் தயாராக விருக்க வேண்டும்

பாதுகாப்பு அங்கத்தவர் பிரசங்கம்

புதியடில்லி, நவ 7

இந்தியாக் கவர்ன்மெண்டு பாதுகாப்பு அங்கத்தவர் கனம். இ. ரகவேந்திரராவ் இன்று டில்லி ரேடியோ ஸ்டேஷனில் இந்நாட்டு ராணுவப் பாதுகாப்பு சம்பந்தமாகப் பேசினர். அவர் தாம் லண்டனில் கேரில வெடிகுண்டெறியப்பட்ட விதத்தையும் அதனால் நேரிட்ட கஷ்டங்களையும் லண்டனிலும் சுற்றுப்புறங்களிலுள்ளவர்களும் அவற்றைத் தாங்கி நிற்கும் தீரத்தையும் எடுத்துச் சொல்லி இந்தியாவில் அவ்வித ஆபத்துகள் நேராமலிருக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டிய அவசியத்தை எடுத்துச் சொன்னார்.

## பண்டித ஜவஹருடன் பேட்டி

### டேராடூன் சிறையில் பேச்சு

டேராடூன், நவ 7

இந்தியச் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீமான் மோகனலால் சாக்ஸேனாவும், சிந்து மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் சோயித்ராம் கிதவானியும் இன்று டேராடூன் சிறையிலே பண்டித ஜவஹரைக் கண்டு பேசினார்கள். இன்றிரவு அவர்களிருவரும் முறையே டில்லிக்கும் லாகூருக்கும் புறப்பட்டுவிட்டனர்.

ஜவஹர் புதல்வி ஸ்ரீமதி இந்திரா நேருவும் நேற்று தமது தந்தையைக் கண்டு பேசினர். பண்டித கோவிந்த வல்லபபந்த் 9-ந் தேதியோ அன்றி 10-ந்தேதியோ இங்குவந்து ஜவஹரைப் பேட்டிகாண்பார் எனத் தெரிகிறது.

## உலகம்பலவிதக்கதை

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டான். புறப்பட்ட இராமனுக்குப் பிள்ளைகளுக்குச் சொல்லாமற் போக மனம் எழவில்லை; அவன் பிள்ளைகளிடம் போய், தன்னை டக்ரர் துணையாகச் சிறிது தூரத்திலுள்ள ஒரு மடத்திற்கு வரும்படி கேட்கின்றாரென்றும் தான் இரவு பத்துமணிக்குள் மீண்டு வந்து விடுவதாகவும் சொன்னான்; டக்ரர் தம்முடன் துணையாக வரும்படி கேட்கின்றாரென்று இராமன் சொல்லக்கேட்ட பிள்ளைகள் பூரண சம்மதத்துடன் அவனுக்கு விடை கொடுத்தனுப்பினர்கள். வாயிலின் புறத்தே வந்து சாமியம்மாளைக் கண்டு இராமன் "நீங்கள் போசனம் முடித்தவுடன் கதவுகளைப் பூட்டிவிட்டுப் பிள்ளைகளை நித்திரை செய்யவிட்டுச் சாவதானமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்ல, "நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், குன்றக் குடியான் அருளால் ஒரு குறையும் நேராமாட்டாது, சுகமே போய்ச்சிக்கிரம்வா" என்று விடைகொடுத்தனுப்பினள் சாமியம்மாள். இராமன் மடத்தின் புறத்தே வந்து நின்றவனையுங் கூட்டிக்கொண்டு டக்ரர் வரவைப் பார்த்தபடி தெருவாசலில் நின்றான்; சில நிமிஷஞ் செல்ல டக்ரர் தமது மோட்டாரதத்துடன் அங்கே வந்து சேர்ந்து "இராமு! காறில் ஏறுங்கள்" என்று சொல்ல, உடனே இருவரும் பின்னாசனத்தில் ஏறியிருந்தார்கள்; முன்னாசனத்தில் டக்ரருக்குப் பக்கத்திலே அரோகதிட காத்திரமுள்ள இன்னொரு வாலிபன் இருப்பதை இராமன் கண்டான். ரதம் போகப் புறப்பட்டது; "இதிலிருந்து வைத்தியசாலைக்கு எத்தனை மைல் தூரம் போக வேண்டும்" என்று டக்ரர் வந்தவனை வினவ "பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் போக வேண்டும் ஐயா" என்று அவன் விடை சொன்னான் இரதம் வேகமாகச் சென்றது; செல்லும் போது, வந்தவன் பக்கத்திலேயிருந்த இராமனைப் பார்த்து "நோயாளியின் பிள்ளைகள் வரக்காணேனே" என்றுகேட்க, பிள்ளைகளும் வேறு பெண்களும் இன்னுமொரு காரிலே புறப்பட்டு வருவார்கள்; எங்களுடன் ஒக்க இருந்து அவர்கள் பயணம் பண்ண மாட்டார்கள்" என்று இராமன் பதில் சொன்னான்; கார் குடிமனையுள்ள இடங்களைக் கடந்து ஒரு வெளியான இடத்தில் வேகமாகப் போகும்போது மூன்று நான்கு பேர் சற்றுத் தூரத்திலே நிற்பது கார் வெளிச்சம் மூலமாக டக்ரர் கண்ணுக்குப் புலப்பட்டது; "இன்னும் வெகுதூரம் போகவேண்டுமோ" என்று டக்ரர் வந்தவனைத் திரும்பிப் பார்த்துக் கேட்க, "இல்லை, ஐயா, இனிச் சமீபந்தான்" என்று சொல்வதற்கிடையில் கார் கடுகியோடியதால், தெருவிற் காணப்பட்டவர்களுக்குள் இரேவந்தது; சற்றுத் தூரத்திலே நடுத்தெருவில் நின்ற அவர்கள் "நிறுத்தடா காறை" என்று சத்தமிட்டார்கள்; கார் நெருங்கிப் போகவே நின்றவர்கள் சற்று விலக, காறின் கூடாரத்தில் ஏதோ அடி விழ்ந்ததுபோற் சத்தங்கேட்டது.

### சண்டை

"ஐயா, கார் நிற்கட்டும்" என்று இராமன் உரத்துச் சொல்ல டக்ரர் காறை ஒருவாறு நிற்கச் செய்தார். உடனே மூவரும் காறிலிருந்து குதித்தார்கள்; காறை நோக்கி நாலுபேர் ஆயுதங்களுடன் ஓடிவரக் கண்டார்கள்; டக்ரர் தம்முடைய ஒரு கையிலிருந்த "ரோட்ச்" வெளிச்சத்தை அவர்களிடையே பீச்சினார்; அது வெளிலோ மிகவும் வலிமையான வெளிச்சம்; எதிரே ஓடிவருபவர்களிடத்தில் ஈட்டி பொல்லு கத்தி முதலிய ஆயுதங்களையன்றித் துப்பாக்கி இல்லையெனக் கண்டார்; இதற்கிடையில் இராமன் ஒரு கையிற் குறுவாளும் ஒரு கையிற் பராணுக் கம்புமாக யுத்த சன்னத்தனாய்ச் சிங்கம் போல் நின்றான்; டக்ரருடன் வந்தவன் பட்டாக்கத்தியும் பொல்லும் பிடித்தபடி முற்பட்டு நின்றான்; டக்ரருடைய ஒரு கையிலே "ரோட்சும்" மற்றக் கையிலே குறுந்துப்பாக்கியும் இருந்தன; ஓடிவந்தவர்கள் இவர்களை விலக்கிவிட்டுக் காறண்டை ஓட முயன்றார்கள்; இதற்கிடையில் இராமன் அவர்களுள் ஒருவனுடைய தலையில் ஓங்கிக் கப்பல் உடைசக அடித்தான்; "அம்மாடி" என்றகதறிக்கொண்டு அவன் சுழன்று நிலத்தில் விழுந்தான்; அவனுடைய தலையிலிருந்து இரத்தம் பெருகியது; இராமன் அடித்துவிட்டுத் திரும்புவதற்கிடையில் இராமனுடைய முதுகில் ஒரு அடி விழ்ந்தது; அதனைக்கண்டு இராமனுக்கு அடித்தவனுடைய தலைக்கு இலக்காக டக்ரருடன் வந்தவனாகிய கறுப்பண்ணன் ஓங்கியடித்தான்; அந்த அடிதவறி அவனுடைய தோளிற்பட்டது; பட்டவுடனே அவன் கத்த, இராமன் அவனுடைய முதுகில் இருமுறை தன் கம்பினால் மோதினான்; "ஐயோ! என்னை யடிக்கவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டு அவன் குறுக்கே இறங்கி ஓட்டம் பிடித்தான்; இதற்கிடையில் திருடரில் இருவர் காறண்டை போனார்கள்; அதனைக்கண்ட டக்ரர் தம் துப்பாக்கியை இலக்கிலாமல் சுத்த வெடியிட்டார்; ஐயோ "கொல்லுறுங்கோ" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் திரும்பிப் பார்த்துப் பார்த்து ஓடினார்கள். ஓடுபவர் பக்கமாக அவர்கள் ஓடிமறையுமட்டும் டக்ரர் ரோட்சைப் பிடித்தார். மூவரும் மீண்டு காறண்டை வந்து காறைப் பார்த்தார்கள்; அதற்குள் இருந்தவனைக் காணவில்லை; அவனுடைய இத்தக் கள்ளரைச் சேர்ந்தவன்தான் என்றெண்ணிக் கொண்டு மீண்டுவந்து நிலத்திற் கிடந்தவனைப் பார்த்தபோது, அவன் பிணம்போற் கிடக்கக் கண்டார்கள்; டக்ரர் அவனுடைய கையைப் பிடித்துப் பார்த்து அவன் கள்ளக்கிடை கிடக்கிறானென உணர்ந்துகொண்டு "கறுப்பண்ணா, இராமு, இவனைத் தூக்கிக் காறுக்குள் போடுங்கள்" என்று சொல்ல, அவர்கள் உடனே அவனைத் தூக்கிக் காறுள் வளர்த்தினார்கள்; டக்ரர் அவனுக்குப் பக்கத்திலே கிடந்த ஆயுதங்களைத் தாமாக எடுத்துக் கொண்டுவந்து காறுள் இட்டார்; எல்லோரும் ஏறியபின் டக்ரர் காறைத் திருப்பி வந்த வழியே செலுத்தினர். (வரும்)

## யாழ்ப்பாணச் சிவனடியார் திருக்கூட்டம்

சைவத் திருத்தொண்டு செய்வதற்காக ஓர் கழகம் நிறுவுவதற்கு ஆகவேண்டியவற்றை யோசித்தற் பொருட்டு மல்லாகம் சைவ ஆங்கில வித்தியாசாலையில் நிகழும் ஐப்பசி மீ 24-ந் தேதி (9-11-41) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஓர் கூட்டம் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. அத்தருணம் யாழ்ப்பாணத்தின் பற்பல பகுதிகளிலுமுள்ள சைவப்பெரியார் இருபதின்மர்வரையில் சமுகமளித்தனர்.

முதலாவதாக சைவசித்தாந்தப் போதினர் திரு. ஐ. பொன்னையா அவர்கள் சைவத்திருத்தொண்டு இக்காலத்தில் செய்யவேண்டிய பற்பலவழிகளையும் சபையோர்க்குச் சுருக்கமாக எடுத்துக் கூறினர். முக்கியமாக சைவசித்தாந்த வகுப்புகள் நடாத்தச் சபையார் ஒழுங்குகள் செய்யவேண்டுமென்பதைக் குறிப்பிட்டார். பின்னர்ச் சபைக்கு யாழ்ப்பாணச் சிவனடியார் கூட்டம் என்றபெயரைத் திரு. க. சிவப்பிரகாசம் பிரேரிக்க நியாயதுரந்தார் திரு. E. தம்பி அவர்கள் ஆமோதித்தார். சபையோர் அங்கீகரித்தனர். அதன்பின் சபையின் கிரமமான உத்தியோகஸ்தர் நியமிக்கப் பெற்றனர். பின்னர்ச் சமுகமளித்த ஐந்து சைவப்பெரியார்களைப் பிரேரித்து அவர்களை உறுப்பினராகக்கொண்ட ஓர்செயலாளர்சபையே திருக்கூட்டப் பிரமாணங்களை வகுக்கவேண்டுமென்று திரு. மு. மயில்வாகனமவர்கள் பிரேரித்தனர். திரு. க. பொன்னம்பலமவர்கள் ஆமோதிக்கச் சபையோர் அங்கீகரித்தனர். ஈற்றில் கூட்டம் 4 மணியவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

சடிதர்

## இணுவில் நெசவுப் பாடசாலைத் திறப்புவிழா

இணுவில் கைத்தொழில் விருத்திச் சங்க ஆதரவில் வலிகாமம் வடகிழக்கு மணியகாரன் திரு. நா. தம்பிப்பிள்ளை அவர்கள் 7-11-41 வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் டி பாடசாலையைத் திறந்து வைத்து நெசவுத்தொழிலின் மேன்மைபற்றி ஓர் சொற்பொழிவாற்றினர். அத்தருணம் உடுவில் கிராமவிருத்திச் சங்கத் தலைவர் திரு. வை. பொன்னுத்துரை அவர்கள் "நெசவுத் தொழிலும் அதன்பயனும்" என்னும விடயம் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தினர். ஆரம்பத்தில் பதினைந்து மாணவர்களுக்கு மேற்சேர்ந்து கற்கலாயினர்.

கடிதர்—

# 'காங்கிரஸ் என்றும் நிமிர்ந்து நின்றே போராடும்'

## புதிய உலக முறையில் நமக்கும் பங்குண்டு

### ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியின் முழக்கம்

கயை நவ 7

"சர்க்காருக்கு மண்டியிடும் வழக்க முள்ளவர்கள் எந்தச் சர்க்காருக்கும் மண்டியிடுவர்; ஆனால் அழுத்தமாக வேரூன்றிய ஒருவிருக்ஷம் எப்படி அசையாமல் நிற்குமோ அதுபோலவே காங்கிரஸ் என்றும் மண்டியிடாமல் நிமிர்ந்து நின்றே போராடும்" என்று நேற்று மாலை விட்டிபார்க்கில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் ஐக்கிய மாகாணப் பழைய மந்திரி, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிதர் முழங்கினர்.

### காங்கிரஸும் நாஸிஸமும்

நாஸிக் கொடுமையைப்பற்றி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பேசுகையில் "மிஸ்டர் சேம்பர்லேன் ஹிட்லருடன் சமாதானமாகப் போக விரும்பிய காலத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ் ஹிட்லரின் போக்கைப் பலமாகக் கண்டித்தது; காங்கிரஸ் எப்பொழுதுமே நாஸிஸத்தை எதிர்க்கிறது. காங்கிரஸ் ஹிட்லர் பக்ஷம் சேர்ந்திருக்கிறதென்று யாராவது சொன்னால் அது சுத்தப் பொய்யாகும்" என்று கூறினர்.

### சுதந்திரப் போராட்டம்

காங்கிரஸ் நடத்திவரும் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி ஸ்ரீமதி பண்டிதர் விவரித்துவிட்டு, தற்போதைய ஸத்யாக்ரஹ இயக்கத்தின் காரணத்தை விளக்கினர்.

"நாட்டில் அமைதியில்லை; சந்தேகங்களும் சம்சயமும் மலிந்து கிடக்கின்றன; ஆகவே மகாத்மாவின் செய்தி பாமர மக்களுக்கெல்லாம் எட்டும்படி செய்ய வேண்டும்; காங்கிரஸ் ஒரு சிலரின் சுதந்திரத்துக்காகப் போராடவில்லை; எல்லா மக்களின் கதி மோக்ஷத்துக்காகவுமே அது போராடி வருகிறது. சுதந்திரத்தைப்பெறத் தயாராயிருங்கள்; ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது" என்றார்.

### யுத்த ஆபத்து

"யுத்தம் அபாயம் நம்மை நெருங்கிக்கொண்டிருக்கிறது; இருந்தாலென்ன? இந்தியாவில் ஆட்களில்லையா என்ன? பின் ஏன் பயக்குராலைக் கிளப்புகிறீர்கள்? கயையில் ஒரு குண்டு விழுந்தால் காங்கிரஸ்காரர் காங்கிரஸ்காரர் அல்லாதார் என்று அது வித்தியாசம் காட்டாது" என்று ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி குறிப்பிட்டுவிட்டுப் புதிய உலக முறையைப்பற்றிப்பிரஸ்தாபித்தார்.

### புதிய உலக முறை

"புதிய உலகமுறை ஏற்படுகையில் அதில் நிச்சயமாக நமக்குப் பங்கு உண்டு; ஆகவே, ஒன்றுபடுங்கள்; அதிகாரத்தை ஏற்று நடத்தத் தயாராகுங்கள்" என்றார் அவர்.

## பர்மாவிலிருந்து வெளியேறுக

### ஜப்பானியருக்குயோசனை?

லண்டன், நவ 7—

பர்மாவிலுள்ள ஜப்பானியர் யாவரையும் வெளியேறும்படி ரங்கூனிலுள்ள ஜப்பானிய கொன்ஸல் ஆலோசனை கூறியிருப்பதாக மலேயா டிரிப்பூன் என்னும் பத்திரிகை இன்று கூறுகிறது. இச்செய்தி எத்துறையிலிருந்து கிடைத்ததென்பது வெளியிடப்படவில்லை.

குறித்த பத்திரிகை கூறும் விஷயத்தை ஜப்பானிய அயல்நாட்டுக் காரியாலயம் இன்று மறுத்திருப்பதாக டோமெய் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

## இறந்த தாய் சொப்பனத்தில் அழைத்தாளாம்

### 18 வயது வாலிபன்தூக்கிட்டுத் தற்கொலை செய்தான்

கண்டி, நவ, 7—

கட்டுக்கலையிலுள்ள தன்னுடைய எஜமானர் வீட்டில் 18 வயதுள்ள சந்தானம் என்ற வாலிபர் நேற்றிரவு தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அவர் எழுதி வைத்துப்போன கடிதத்தில் தம்முடைய தாய் சொப்பனத்தில் அழைத்ததற்கிணங்கத் தாயைப் பின்பற்றித் தாம் செல்வதாக அவர் குறிப்பிட்டிருந்தார். தூக்கிட்டுக்கொண்டதால் மரணம் சம்பவித்ததாக விசாரணையின் போது தீர்ப்புக் கூறப்பட்டது.

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

இந்துக்கல்லூரி அதிகாரசபையில் ஓர் உத்தியோகஸ்தன் என்ற முறையில் தாம் ஒன்றுகூற விரும்புவதாகவும், திரு. இராசரத்தின மவர்கள் இந்துக்கல்லூரி அதிகாரசபையில ஒருவர் என்ற முறையில் இந்துக் கல்லூரி அதிகாரிகளை ஓர் இந்துப் பெண்கள் பாடசாலையைத் தொடக்க ஊக்கவிட்டிருக்கின்றன ரென்றும் அவ்வேலை விரைவாகக் கையாளப்பட்டு வருகின்றதென்றும் குறிப்பிட்டார்."

புத்த இந்து அநாதசாலைகளிலும் பார்க்கக் கிறிஸ்தவ அநாதசாலைகளுக்கு அரசாங்கம் அதிக பங்கு கொடுத்து வருகிறார்கள் என்று திரு V. இராமசாமி குறிப்பிட்டார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பள்ளிக்கூடங்கள் எல்லா விதத்திலும் திருப்திப்படுத்தக்கூடிய முறையில் அமைக்கப்பட்டாலுங்கூட அவை அவசியமற்றவை என்ற கருதி 5 வருஷம் போன்ற நீடித்த காலத்திற்குக்கூட அவற்றிற்கு ஆசிரியர் நன்கொடை கிடையாமற்பண்ணிவிடுகிறார்கள் வித்தியாதரிசிகள் என்று அத்லக்காத் திரு. P. இரகுபதி குறிப்பிட்டார். மேலும் இதுபற்றி அண்மையில் நடந்த ஒரு கூட்டத்திற் பேசும்போது கௌரவ. லேர். டி. பி. ஜயத்திலகா கல்வி மந்திரிக்கு ஞாபகப்படுத்தியிருக்கின்றார் என்றும் இவ்வாறே புத்த இந்துக் கல்வி ஸ்தாபனங்கள் கொலை செய்யப்பட்டும் கிறீஸ்தவ பாடசாலைகளுக்குச் சில வருஷங்கள் உயிரோடிருக்க உதவி செய்யப்பட்டும் வருகின்றன என்றும் அவர்குறிப்பிட்டார்.

ஆசிரியர்கள் அரசியல் விஷயத்திற் பங்கு பற்றுதல் கூடாதென்று அவர்களைத் தடுக்கச் சிலர் முயற்சி செய்துவருகிறார்களென்றும் பிற்சந்தியாரை ஆக்குதற்கெனத் தேசியப்பட்ட ஒழுக்கமும் தலைமையுவாய்ந்த ஆசிரியர்கள் அரசியல் விஷயத்திற் றலையிடத் தகுதியற்றவர்கள் என்று சொல்லுதல் பொருந்தாதென்றும் அரசியல் விஷயத்திற் பங்குபற்றுதலினால் ஆசிரியர்களின் தொழில் எவ்விதமும் பாதிக்கப்படாது. ஆசிரியர்களுக்கு நிகழ்த்தப்படும் அநீதியிலும் அவமானத்திலும் நின்று அவர்களைக் காப்பதற்குச் சபை முயலும் என்று தாம் நம்புவதாகவும் பண்டிதர் கதிரிப்பிள்ளை பேசினர்.

திரு. இராசரத்தினம் அவர்கள் பேசியவை வருமாறு:—

சைவ வித்தியா விருத்திச் சங்கப்பாடசாலைகள் அவசியமற்றவை என்று வித்தியாதரிசிகள் கூறுகின்றார்கள் என்று திரு. இரகுபதி கூறினர். ஏழை வித்தியாதரிசிகள் அல்லக் குற்றவாளிகள். மேலதிகாரிகளிடமிருந்தே இந்தக் குழப்பம் ஆரம்பித்தது. ஆசிரியர் நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்தற்கு வேண்டிய பரீக்ஷையை நடத்துதற்காகத் தையிட்டிப்பள்ளிக்கூடம் கசெற்றிற் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்பள்ளிக்கூடத்தை அவசியமற்றதென்று மூன்று வருஷங்களுக்கு அப்பள்ளிக்கூடம் ஆசிரியர் நன்கொடை பெறுமலதடுத்ததலைப்பதற்கு கல்வி திருவாகசபை அங்கத்தவர் என்ற தமது அந்தஸ்தை உபயோகித்தவர் ஓர் இலங்கையரல்லாத இந்து அரசாங்கசபை அங்கத்தவரேயாவர். இத்தகைய காரியங்களை ஆசேஷிப்பதற்கு உண்மையான இந்து அங்கத்தவர் ஒருவரும் அரசாங்கசபையில் இல்லை. இதுதான் "இந்துக்களுக்கு இப்போது பெருங்குறை."

அறிக்கை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அதன்பின் சபைத் தனதிகாரி தமது கணக்குகளைப் படித்தார்.

அதனை அங்கீகரிக்கும்படி சபையைக் கேட்டுக்கொண்டபோது அக்கணக்குகளை சபையார் எவ்வளவு உபயோகமாக அப்பணத்தைச் செலவு செய்திருக்கின்றனர் என்பதைக்காட்டுகின்றன என்றும், இன்னும் அதிகமான பணம் வந்து சேருமாயின் எவ்வளவு உபயோகமான வேலைகளைச் சபை செய்து முடிக்கக்கூடியதாக இருக்கின்றதென்றும் தலைவர் குறிப்பிட்டார்.

இதை ஆமோதித்துப் பேசுகையில் திரு. இராசரத்தினம் அவர்கள் குறிப்பிட்டவை வருமாறு:—

ஒவ்வொரு திருவாகசபை அங்கத்தவரும், சாதாரண அங்கத்தவரும், ஆசிரியரும் தனித்தனி சபைக்கு ஒவ்வொரு ஜீவியகால அங்கத்தவரைச் சேர்க்க நினைத்தால் சேர்ப்பது முடியாத காரியமல்ல. அப்படிச் சேர்த்தால், அனேகம் ரூபா வந்து சேரும். அதனால் சபைக்கு இப்போதுள்ள கடனும் 25,000 ரூபா திருவாதோடு மேலதிகமாகவும் ஆகவேண்டிய செய்வதற்கு 25,000 ரூபாமிஞ்சும். இவ்வகையில் பள்ளிக்கூடத்துக்குப் போகும் வயதடைந்த 1,50,000 இந்துப் பிள்ளைகளில் 50,000 பிள்ளைகள் மாத்திரமேஇந்துப்பாடசாலைகளிற் படிக்கின்றனர். அவ்வளவு தொகையான ஜீவியகால அங்கத்தவர்களைச் சேர்ப்பது கஷ்டமாக இருந்தால், ஒவ்வொருஅங்கத்தவரும்இரண்டு புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பது எளிது. இவ்வண்ணம் செய்தால் வருடா வருடம் கிடைக்கும் 16,000 ரூபாவோடு மேலதிகமாக 20,000 ரூபா வந்து சேரும்."

சில கேள்விகள் கேட்கப்பட்டபின் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

அதன்பின், காரியகமுள்ள இடங்களுக்குப் பின்வரும் புதிய நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:—

1. முடிக்குரிய அத்வக்காத் திரு. A. V. குலசிங்கம் (ஆசிரியர், ஆங்கில இந்துசாதனம்)
2. திரு. A. சம்பந்தன் (அத்வக்காத்)
3. திரு. P. இரகுபதி (அத்வக்காத்)
4. திரு. S. N. இராசதுரை (அத்வக்காத்)
5. டக்டர் S. சுப்பிரமணியம்
6. டக்டர் S. இராசையா
7. திரு. T. முத்துக்குமாரு B. A.
8. திரு. P. பாலசிங்கம் (வழக்கறிஞர்)
9. திரு. R. கந்தையா (தோட்ட முதலாளி)
10. திரு. C. நடராசா (வர்த்தகர்)

தேவாரபாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

சிறிது நேரத்தின் பின்னர் நிர்வாகசபையார் கூடி, இப்போதைய உத்தியோகஸ்தர்களையும் நிர்வாகசபை அங்கத்தவர்களையும் குப்பரிசோதகரையும் மீளவும் தெரிவு செய்தனர். 6 மணியளவில் தலைவருக்கு நன்றி கூறப்பட்டதும் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## சுகாதாரசபைக்குப் பதில் பட்டினசபை

### சுயதலதாபன நிருவாகசபையின் பழையமுடிவில் மாற்றம்

### 14 நகரங்களில் அமைக்கப்படும்

பட்டினசபை நிருவாகத்திற்கு மாற்றப்படவிருக்கும் சுகாதாரசபை நகரங்கள் விஷயமாகச் சுயதலதாபன நிருவாகசபை முன்னர்ச் செய்திருந்த தற்காலிகமான தீர்மானங்களை மாற்றியிருக்கிறது.

இப்போதைய நிலைமையிற் கீழ்க்காணும் 14 நகரங்கள் மாத்திரம் 1943-ம் ஆண்டு ஜனவரி 1-ந்திகதி முதல் பட்டினசபை நிருவாகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன:—

வத்தளை-பாமோல, கம்பஹா, அவிசாவலை, மினுவாங்கொடை, கந்தளை-ஜாஎல, ஹொரானை, வத்தகாமம், கடுகண்ணவை, பலாங்கொடை, அம்பலாந்தோட்டை, குளியாப்பிட்டி, மாதம்பை, மன்னர், பருத்தித் துறை.

கீழ்க்காணும் நகரங்கள் சுகாதாரசபை நிர்வாகத்திலேயே இருக்கும்:—

வட்டுவை, ஹிக்கடுவை, தொடந்துவை, வரக்காப்பொலை, வல்வெட்டித்துறை, கல்முனை.

கீழ்க்காணும் நகரங்கள் கிராமச்சங்க நிர்வாகத்திற்கு மீண்டும் கொண்டுவரப்படவிருக்கின்றன:—

புவாக்பிட்டி, பன்வில, மாவிலாதாண்டியா.

அப்புத்தளையும் பண்டாரவளையும் ஒரு கூட்டுப்பட்டினசபையின் கீழ்க் கொண்டுவரப்படவிருக்கின்றன.

நியத்தலாவை நகரம் சுகாதாரச்சபை நிருவாகத்திலேயே இருந்து வரும்.

கீழ்க்காணும் நகரங்கள் எத்தகைய நிருவாகத்தின் கீழ் இருக்க வேண்டுமென்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இவ்விஷயம் மேலும் ஆலோசனை செய்யப்படுவதற்காகப் பின்போட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

டொண்ட்ரா, தங்காலை, வெலிப்பிட்டை அனுராதபுரம், பொல்காவலை.

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்லின்

# புடைவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலெவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்றுணிகள் |
| சேலைகள் | ரகுர்கள் |
| சாரங்கள் | 'வேஸ்ட்' துணிகள் |
| கம்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்பிலின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127. 11-10-40—





மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும் சகலருக்கும் ஓர் விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீர்சுழிவு, வாதம், சொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கி விடும். கண்டிப்பாகப் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும். கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3.41—30.3.42



புதிய [1942] பாடத்திட்டத்திற்கு
இயைந்த

## தமிழ் இலக்கிய வாசகங்கள்

5-ம் 6-ம் 7-ம் வகுப்புகட்குரியவை

| | | | |
|---|---|---|---|
| 1 | இலக்கியவாசகம் முதற்பாகம் | சதம் | 15 |
| 2 | ,, இரண்டாம்பாகம் | சதம் | 20 |
| 3 | ,, மூன்றும் பாகம் | சதம் | 25 |

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.



திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுத்தது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)


## தமிழில் வசனநடை

1-ம் பக்கத்தொடர்ச்சி

களே, கொஞ்சம் தமிழ் பேசும் பொதுமக்கள் வாழும் இடங்களுக்குப் போய் கேட்டார்களானால் என்ன சொல்லுவார்களோ தெரியாது.

கந்தன் சுப்பனைப் பார்த்துச் சொல்லுகிறன்: 'அண்ணை சௌக்கியந்தானே!' சுப்பன் சொல்லுகிறன்: 'எல்லாம் சௌக்கியந்தான் தம்பி, ஆனால் அந்த நன்றிகெட்ட மனுஷனால் நான் படுங்கஷ்டம் போதும் போதுமென்றுவிட்டது'

'யாரண்ணை, அந்த அம்பலவிலிருந்து வந்த அறிவுகெட்ட ஜென்மமா?'

இப்படி அவர்கள் சம்பாஷிப்பதைக் கேட்டு, 'டேய் சுப்பா, கந்தா, என்னடா தமிழைக் கொலைபண்ணுகிறீர்கள் இப்படியெல்லாம் கண்டபடி தமிழோடு சமஸ்கிருதம் கலந்து பேசக்கூடாதே' என்று கட்டளை போட்டால், 'என்ன ஐயா, நான் சமஸ்கிருதமா பேசுகிறேன், அதென்னையா சமஸ்கிருதம், கேள்விப்பட்டதில்லையே, பிராமணர் திவசஞ் செய்வானே அதுவா' என்று கேட்பான். 'இல்லையடா, நீதான் இப்பொழுது, சௌக்கியம், கஷ்டம், ஜென்மம் என்றெல்லாம் சமஸ்கிருதம் பேசவில்லையா' என்று சொன்னால், அவன் நம்மைப் பைத்தியந்தான் என்று நினைப்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது. இவ்வாறு தமிழ்மக்கள் நாள்தோறும் பேசும் பாஷையிலே சமஸ்கிருதச் சொற்கள் இருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியாது. அவையெல்லாம் தமிழ் என்றே யவர்கள் பேசுகிறார்கள்.

இப்படியாகப் பொதுமக்கள் வாழ்க்கையிலும் நாவிலுமே சமஸ்கிருதச் சொற்கள் தூயதமிழ்போல் ஊறியிருக்கும்போது, சுத்த தமிழ் பேசு, தனித் தமிழில் எழுது, என்று சொன்னால், 'தமிழ்ப்பாஷை பேசும் பொதுமக்களையெல்லாம் ஊமையாக்கு, தமிழ் என்று இன்னொருபாஷை வடித்துச் சிருட்டிக்கிறோம்' என்பது போலத்தான் இருக்கும். ஒரு பாஷை காலத்திற் கேற்ப மாறிக்கொண்டு பேசுவது இயல்பு. அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. பழைய காலத்தில் குகைகளிலே வசித்தார்கள். அவர்கள் அந்தக் காலத்தில் எப்படிப் பேசினார்களோ அப்படித்தான் ஆகாயத்தில் பறக்கும் இக்காலத்திலும் பேசவேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு ஏன் வேண்டும்?

போனால் போகிறது, அப்படித்தான் இருந்தாலும், 'தமிழிலே வடமொழி கலக்கக் கூடாது' என்று இலக்கண நூலாசிரியர்கள் கட்டுப்பாடு செய்திருக்கிறார்களா? இவர்கள் தமிழுக்குத்தொல்காப்பியத்தைவிடச் சிறந்த இலக்கண நூல் இல்லையென்றே ஒப்புக் கொள்ளுகிறார்கள், அத்தொல்காப்பியர் என்ன சொல்லுகிறார்.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே"
"சிதைந்தன வரினும் இயைந்தன
வரையார்"

என்று இரண்டு சூத்திரங்கள் கூறுகிறார். தொல்காப்பியத்துக்கு உரையெழுதிய இளம்பூரண அடிகள்கூட "வடசொற்கிளவி" யென்பதற்கு, 'வடசொல்லோடொக்கும் தமிழ்ச் சொல்' என்று உரையெழுதுகிறார்; அவையும் தமிழ்ச் சொற்கள்தான் என்றது அவர்கருத்து. இந்தப் பழைய உரையாசிரியர் தொல்காப்பியக் கடலை அட்சரம் அட்சரமாய் நுட்பம் பார்த்தவர். அப்படிப் பார்த்துத்தான் ஆரியத்துக்கும் தமிழுக்கு முள்ள உறவை இறுக்கமாகக் கூறினார்.

ஆனால் இந்தத் தனித்தமிழ்ப் பைத்தியங்கள் இப்படி மண்டை உடைப்பதைப் பார்த்தால் "தொல்காப்பியா, உன்னுடைய மூளை வெறும் களிமண்மூளை, சமஸ்கிருதம் தமிழில் வருமென்று சொல்லி, அதற்குச் சூத்திரமுஞ் செய்பவனா! மூட்டாளே!!" என்று கேட்பது போல இல்லையா! மூத்திய அந்தப் பண்டிதர்கள் தமிழைக் கரடுமுரடு படுத்துவதோடு நின்று விடுகிறார்கள். ஆனால் இவர்களோ அதோடு இப்படியொரு பைத்தியத்தையுங் கட்டிக் கொண்டு அழுகிறார்கள். இது எல்லாம் தனித்தமிழா! தயவு செய்து, இவர்களெல்லாம் மஹேசகுமாரசர்மா அவர்களெழுதிய, விவேகானந்த விஜயம், ஆனந்த மடம் (மொழிபெயர்ப்பு) என்னும் நூல்களை ஒருக்கால் வாசித்துப் பார்க்கட்டும். அப்பொழுது தெரியும் தனித்தமிழோ ஆரியமும் கலந்த நடையோ சிறந்ததென்று. அவர் நடையிலுள்ள கம்பீரமும், தெளிவும், ஆற்றலும் எங்கும் காணமுடியாதென்று ஒப்புக்கொள்ளுவார்கள். அதிக நேரம் ஏன் போகவேண்டும்; டி. என். குமாரஸ்வாமி அவர்கள் இப்பொழுது எழுதிவரும் கதைகளைக் கண்டாவது இந்தப் பைத்தியம் தீராதா!

### பகுத்தறிவுப் போட்டியா?

பத்திரிகைகளி லெல்லாம் ஒரு சிறிய பக்கத்தில் சதுரம் போட்டுப் பகுத்தறிவுப்போட்டி வெளியிடுகிறார்கள். ஆனால் சிலர், எழுதுவதிலும் பேசுவதிலும் சொல்லுடாட்டப் போட்டி போட்டு விரப்புகிறார்கள். பொருள் எப்படியிருந்தாலும் விஷயம் எப்படிப் போனாலும் மோனை எதுகை வசனத்தில் வரவேண்டும். "என்னகத்தைப் பன்னுட்களாய்ப் பின்னிய இன்னுயிர் எந்தலே, இனிமேல் என்னால் இறைப்பொழுதும் நும்மை மறந்திருக்க முடியாது", "அன்பும் இன்பும் அழகொழுகும் அறிவுருவும்" என்று இப்படியெல்லாம் எழுதுகிறார்கள்.

என்ன என்று தொடங்கினால், மன்ன; பன்ன, கன்ன என்று வரவேண்டும். இப்படியொரு சொல்லுடாட்டப் போட்டிக்குச் சத்தியஞ் செய்துவிட்டு வசனமெழுதத் தொடங்குகிறார்கள். வசனநடைக்கு அதன் அழகும், தெளிவும், பொருளுமே முக்கிய மென்பதை மறந்து வெறும் பிதற்றலுக்காகவே வசனமெழுதுகிறார்கள்; இவர்கள் மோனை எதுகைச் சொற்களுக்காகவே வசன மெழுதுகிறார்கள்!

—வரும்

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

ரூபா) கொடுக்கும் சைவர் எவரும் தடையின்றி அங்கத்தவராகலாம். 100 ரூபா கொடுக்கும் சைவர் எவரும் சீவியகால அங்கத்தவர் ஆகுவர்.

சைவர்கள் இருதயத்தில் இன்னும் சைவசமயமும் சைவப்பானமையும் கிடக்கில், கேடடைக்கும் சகோதர சகோதரிகளிடத்தும் செல்லும் அன்பான சிந்தையும் அழியாதிருக்கில், வருங்காலத்தைப்பற்றிய சிந்தையும் அன்பும் உண்டாகில், 17½ வருடத்தில வெம்மொழுத தொல்லைகளை வென்று தனது திருவருளால் இலங்கையில் ⅓ பகுதிக்கு மேற்பட்ட சைவப்பாடசாலைகளிற் கல்வியை ஊட்டிவருகின்ற சைவ வித்தியாவிருத்திச் சங்கத்துக்கு நினைவாலும் சொல்லாலும் செயலாலும் சைவர்கள் உதவிசெய்ய முற்படுவார்கள் என்று நாம் பூரணமாய் நம்புகிறோம்.

சங்கத்துக்குக் கொடுக்கும் ஒவ்வொரு ரூபாவும் பெரும்பாலும் எப்படிச் செலவாகும்?

1. தக்க ஆதாரர்கட்கும் கதியற்றவர்கட்கும் உணவும் உடையும் கொடுத்தற்கு உபயோகிக்கப்படும்.

2. சைவப் பையர்கள் ஆதாரசாலைக்கும் சைவப் பெண் ஆதாரசாலைக்கும் கட்டடம் கட்டுவதற்குப் பட்ட கடனைக்கொடுக்கவும் உபயோகிக்கப்படும்.

3. ஆதாரசாலைகட்கு வேண்டிய கட்டடங்களை முடித்து இனனும் வேண்டியிருக்கும் அடுக்கணிகளை சம்பாதிக்க உபயோகிக்கப்படும்.

4. இப்போதுள்ள பாடசாலைகட்கு இன்னும் காணி வாங்கியும் கிணறு வெட்டியும் இன்னும் கட்டடங்கள் கட்டவும் திருத்தவும் உபயோகிக்கப்படும்.

5. நமது பாடசாலைகளிற் புதிய முறையில மலசலகூடங்களமைத்தற்கும் உபயோகிக்கப்படும்.

6. மதமாற்றத்தால் சைவசமயம் குன்றிப்போகும் கிராமங்களிற் புதிய சைவப்பாடசாலைகள் கட்டி நடாத்திச் சைவசமயத்தை நிலைநாட்டுதற்கும் உபயோகிக்கப்படும்.

7. புதிய பாடசாலைகளின் வறிய பிள்ளைகளுக்கு மத்தியானப் போசனமளித்தற்கு உபயோகிக்கப்படும்.

சிறந்தளி பெருவெள்ளம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

சு. இராசரத்தினம்,
காரியதரிசி.


பக்தர்கள்
நோய்தீர வேண்டுமா?

உங்கள் நோய் கர்மநோயானாலுஞ் சரி இங்கிலீஷ், தமிழ் டாக்டர்களால் தீர்க்க முடியாத நோயைப் பழநியாண்டவர் அபிஷேக பஞ்சாமிர்தம் சந்தனம், விபூதி முதலாம் அருட்பிரசாதம் (போகரிஷி அவுடதம்) உட்கொள்ளத் தீர்ந்து சுகதேகமாகலாம்.

ஷை பிரசாதங்கள்
தபாற்செலவுடன் ரூபா 5—0—0

P நடராஜபண்டாரம்
மலைக்கோவில் அயன்மியான் பழநி.
Q 92A 25-8-41—24-11-41(வி)



## 600 வருஷப் பழமை வாய்ந்தது

பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைல'முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.

"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.

நேத்திர ரத்தின தைலம் நோய்களை மாற்றப் பேயர் பெற்ற மருந்தெண்ணெய்

இந்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கல்குத்து, நீர்வடிதல், கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும். கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும். இது மூளைக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்நோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.

குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருவதற்கு உத்தரவாதமுடையது.

விலை ரூபா. 2/50

ஏஜெண்டேகள்:- எஸ் மால்ஜீ அமிஜீ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
Q 115 23.10.41—22-1.42



பத்திரக்கிரயம்

| | | | |
|---|---|---|---|
| [illegible] தமிழ் ரூபா 5.00 | இங்கிலிஷ் தமிழும் 9.00 | | |
| இலங்கை இந்தியா 8.00 | இங்கிலிஷ் தமிழும் 12.00 | | |
| தொலோப் பகுதி 9.00 | இங்கிலிஷ் தமிழும் 13.00 | | |

தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்


## திருச்சி றேடியோ நிகழ்ச்சி

† இசைத்தட்டுகள்

வெள்ளி நவம்பர் 14

காலை: 7-30 கீதாசம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 தான்-இ-ஷரீப் 8-00 கவ்வாலிகள், நாத† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 இன்னிசை 9.00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம்† 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எச். எஸ். மத்வாசார் கோட்டுவாத்தியம் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை: 5-00 சேலம் ஜி தேசிகர் பாட்டு 5-45 வாசுெலி வாத்யகோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 பி. எஸ். அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 7-00 நடைமுதல் நிகழ்ச்சி 7-15 இலக்கியவாசகம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 பி. எஸ். அங்கப்பபிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் 8 45 சேலம் ஜி தேசிகர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு

சனி நவம்பர் 15

காலை: 7-30 கீதாசம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருமொழி விளக்கம் 8-00 பஜனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படப்பாட்டுகள்† 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சங்கீதம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 சானலோலா வீணை 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸ்ரீமதி கே. எஸ். ராஜலக்ஷ்மிபாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு

மாலை: 5-00 ஸ்ரீமதி கே. எஸ். ராஜலக்ஷ்மிபாட்டு 5-45 உம்ராஜியா பேகம்† 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 மதராசில் உள்ளபடி (ஸ்ரீமதி எம். எஸ். விஜயாள் கோஷ்டிவாத்தியத்துடன் பாட்டு) 7-00 செய்திக் கடிதம் தமிழ் 7-15தாளவாத்தியக்கச்சேரி 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராசில் உள்ளபடி (செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் பாட்டு) 9-15 இடைவேளை† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### அறிவித்தல்

இத்தால் இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுஜனங்களுக்கும் அறிவிப்பதாவது:—

எனது பெயர் பிறப்புப்பத்திரத்தில் கந்தையா தங்கம்மா என்று பதியப்பட்டிருந்தபோதும் பாடசாலைகளிலும் உலக வழக்கிலும் கந்தையா சத்தியபாமா என்றே வழங்கப்பட்டு வந்தது. இனியும் என்பெயரைக் கந்தையா சத்தியபாமா என்றே வழங்கி வருவேனென்பதை எல்லோருக்கும் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
க. சத்தியபாமா

திருநெல்வேலி
9.11.41
Mis 131 10—13—17-11-41

1942-ம் ஆண்டில் தமிழ் ஆசிரிய பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தற்கான பரீட்சை

இப்பரீட்சை 1942-ம் ஆண்டு [illegible] 23-ந் திகதி நடைபெறும். பரீட்சார்த்திகள் [illegible] பத்திரப் பரீட்சை [illegible] ஒரு பாடசாலை [illegible] பரீட்சை [illegible] 1-12-42-க்குப் பின் [illegible] 28-2-1942 க்குப் [illegible]

[illegible] 28-3-1942-ல் நடைபெறும். இதற்கான விண்ணப்பங்கள் 31-1-1942-க்குப் பின் [illegible] இதற்கான விதிமுறைப்பத்திர அறிவித்தலும் விண்ணப்ப பத்திரங்களும் இங்கே [illegible] பெறலாகும்.

எல். மெக்டி ரெபீசன்.
வித்தியாதிகாரி

வித்தியாகந்தோர்,
கொழும்பு 5-11-1941
G 27 10—13-11-41

## வெள்ளவத்தை ஆலவேலை நிறுத்தம் முடிந்தது

திங்கட்கிழமை தொழிலாளர் வேலைக்குத் திரும்புவர்

வெள்ளவத்தை நெசவுஆலைவேலை நிறுத்தம் முடிந்து விட்டது. வேலை நிறுத்தஞ் செய்த தொழிலாளர்கள் திங்கட்கிழமை காலை மீளவும் வேலைக்குத் திரும்புவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய தினம் தொழிற் கட்டுப் பாட்டு அதிகாரி மிஸ்டர். எப். வி. ஜிம்லனின் காரியாலயத்தில் ஆலையின் நிர்வாகஸ்தரும் வேலை நிறுத்தஞ் செய்த தொழிலாளரின் பிரதிநிதிகளும் ஓர் ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டனர்.

இப்போதைய சமாச ஒப்பந்தத்தின்படி தொழிலாளர் வாழ்க்கைச் செலவு 120 பேரயிண்டி விருந்து 127 வரை இருந்தால் குறித்த ஆலைத் தொழிலாளருக்குத் தனித்தனி 8 சதம் யுத்த அலவன்ஸ் வழங்க வேண்டும்.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டனைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் சாவகச்சேரி மு. ரா மு. செ. சேதுராஞ் செட்டியார் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த லேலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின்விபரம்:

1940-ம் ஆண்டு ஜனவரி மாதம்

| எண். | இ. | ரு. சத. | பெயர் நகைவிபரம் |
|---|---|---|---|
| B 2606 | 21 | 8 | சாவகச்சேரி கா. வேலுப்பிள்ளை இமி வெ கல் தோடுசோடி 1 |
| பிப்ரவரி | | | |
| 2966 | 8 | 10 | சரசாலை நி: திருநாவுக்கரசு பிங்கோக்கி 1 |
| 3022 | 11 | 55 | மட்டுவில் தெற்கு பொ. கந்தையா குண்டுச்சங்கிலி 1 |
| 3143 | 17 | 50 | சாவகச்சேரி அ. தம்புப்பத்தர் முறிச்சக்குத்தி அட்டியல் 1 |
| 3317 | 27 | 7 | மீசாலை தெற்கு சு. முத்தையா குவளைக்கடுக்கன் சோடி 1 |
| மார்ச்சு | | | |
| 3356 | 1 | 6 | நுணாவில் கிழக்கு வே. சின்னத்தம்பி இமிகல் அச்சரக்கூடு 1 |
| 3614 | 19 | 30 | சாவகச்சேரி தெற்கு கா. நாகலிங்கம் விலாசம் போட்ட ஆடுதன் மோதிரம் 1 இமிகல் மோதிரம் 1 |
| 3712 | 25 | 8 | கொப்பேலி க. கல்லதம்பி கொண்டைப்பூ 1 |
| 3738 | 26 | 7 | வெள்ளாம்போக்கு ஐ. கந்தன் இமிகல் தோடு சோடி 1 |
| ஏப்ரல் | | | |
| 3904 | 5 | 8 50 | சரசாலை வடக்கு க. குமாரசாமி இமிகல் தோடு சோடி 1 |
| 4021 | 12 | 12 | கொம்பு வைத்த குளம் சி. காசிநாதர் இணைமணிக்கோர்வை 1 |
| 4066 | 16 | 160 | சாவகச்சேரி மு. தம்புப்பத்தர் இமி கல் முகப்புடன் கெட்டிக் காப்பு சோடி 1 மினுகாப்பு சோடி 1 |
| 4169 | 22 | 185 | மட்டுவில் ச. பொன்னையா சரட்டுக்கொடி 2 |
| மே | | | |
| 4428 | 7 | 10 | சாவகச்சேரி க. ஐயாத்துரை இமி வெ கல் தோடுசோடி 1 |
| 4551 | 14 | 150 | கெரிகொச்சி வடக்கு ப. சின்னையா சரட்டுக்கொடி 1 |
| 4571 | 14 | 200 | மட்டுவில் தெற்கு சு. வேலுப்பிள்ளை இரண்டுடன் தாலி முறிச்சக்குத்திக் கொடி 1 |
| 4624 | 16 | 10 | மட்டுவில்வடக்கு பொ. பீதாம்பரம் இமிகல்தோடுசோடி 1 |
| 4682 | 19 | 25 | சாவகச்சேரி அ. தம்புப்பத்தர் அருமபுமணிக்கோர்வை 1 காட்டுக்கடுக்கன் சோடி 1 |
| ஜூன் | | | |
| 4917 | 2 | 50 | பரந்தன் சி. கந்தையா குண்டுச்சங்கிலி 1 |
| 5072 | 12 | 20 | சாவகச்சேரி மா சின்னப்பு இமிகல்தோடு சோடி 1 |
| 5191 | 20 | 16 | ,, சி செல்லையா திருமாங்கல்யம் 1 |
| 5308 | 27 | 15 | ,, சி கந்தவனம இமி சிவக்கல்மோதிரம் 1 மேற்படி புரூச் 1 |
| 5365 | 30 | 10 | சாவகச்சேரி தெற்கு வா இளையதம்பி அச்சரக்கூடு 1 |
| ஜூலை | | | |
| 5808 | 27 | 8 | மட்டுவில்தெற்கு சி. சப்பையா பின்னைக்காப்பு சோடி 1 |
| 5822 | 27 | 7 | மறவன்புலோ வே நாகன் இமிகல் அச்சரக்கூடு 1 |

விற்பனவு நிகழும் விஷு வருஷம் கார்த்திகை மாதம் 20-ந் திகதிக்குச் சரியான 1941-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் எடுபடாத நகை பிரதிக்ஞலாக மிகுதி மேற்படியார் கடையில் பிரசித்த லேலத்தில் விற்கப்படும்.

கா. வீரவாகுவுடையார்
லெக்கீஸ் மேஸ்தர்

Mis 132 13—17-11 41



## குயீன்பிரண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை நிறைந்த குணம்

எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறாத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.

இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

( Y. 21. 11-8-40—10-8-41.) வி



வாதம், சலரோகம், குன்மம், முதலிய
எந்த
வியாதியானலும்
உத்திரவாதத்துடன்
குணப்படுத்தப்படும்

சுகாதார மாஜி மந்திரி கனம்
Dr. T. S. S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr C. சபாபதி, M. B. C. M. M. R. C. S. L. R. C. P.
முதலிய பலரால் புகழ்ந்து நற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பட்டன.
நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்.

Dr. K. S. Paripurnananda
Regd. Medical Practitioner
R. K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
Jaffna
Q 129 6-11-41—5-2-42



விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சிந்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவகிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கால சக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7.41—19-7.42



விளம்பர விகிதம்

முதன்முறைக்கு

| | |
|---|---|
| ஒருகலம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா 6-00 |
| கால்கலம் ரூபா 4-00 | ஒரு அங்குலம் ரூபா 1-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

[illegible] விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் [illegible] முன்னரே ஒழுங்கு செய்யவேண்டும். [illegible] அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.



## தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரொப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4.3.41—3.3.42


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Thursday November 13th 1941.